விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 10 சனிக்கிழமை (25.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 006

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT RAMCO

SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## முன்னாள் போராளிகள் 98 பேர் இன்று விடுதலை

(வவுனியா)

நத்தார் தினத்தை முன்னிட்டு புனர்வாழ்வு நிலையங்களில் தங்கியிருந்த முன்னாள் புலி சந்தேகநபர்கள் 98 பேர் இன்று காலை சனிக்கிழமை விடுதலை செய்யப்படவுள்ளனர் என புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர தெரிவித்தார்.

வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெறும் வைபவத்தில் இவர்கள் விடுதலை செய்யப்பட்டு பெற்றோர்கள் பாதுகாவலர்களிடம் (16ஆம் பக்கம் பார்க்க)

## தென்பகுதியிலிருந்து 28 இலட்சம் பேர் யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலா

(கொழும்பு)

2010ஆம் ஆண்டில் இதுவரை தென்னிலங்கையைச் சேர்ந்த 28 இலட்சம் பேர் யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலாவாகச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. வருடம் முடிபடைய இன்னும் சில தினங்களே எஞ்சியுள்ள நிலையில் அதற்கிடையில் இன்னமும் இரண்டு லட்சம் பேர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வார்கள் என நம்பப்படுகின்றது.

ஏப்ரல், ஆகஸ்ட் மற்றும் டிசம்பர் மாதங்களில் பாடசாலை விடுமுறைக்காலம் என்பதனால் அதிகளவான மக்கள் யாழ்ப்பாணத்திற்கு (16ஆம் பக்கம் பார்க்க)




# விசாரணைக்கு இடமளிக்காவிடின் ஐ.நா.குழு இலங்கை செல்லக்கூடாது

### மனித உரிமை கண்காணிப்பகம் வேண்டுகோள்

(கொழும்பு)

**இலங்கையின் போர்க் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கு இடமளிக்காதுவிட்டால் இலங்கைக்கு ஐ.நா.செயலாளர் நாயகம் நியமித்த நிபுணர்கள் குழு விஜயம் மேற்கொள்ளக்கூடாதென மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியத்திற்கான நிறைவேற்றுப் பணிப்பாளர் பிராட் அடம்ஸ் கூறியுள்ளார்.** (16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு நவீன ஆயுதங்களை இந்தியா அன்பளிப்பாக வழங்கும்

### பி.ரி.ஐ. செய்திச்சேவை தெரிவிப்பு

(கொழும்பு)

இந்திய பாதுகாப்புச் செயலர் பிரதீப் குமார் இருநாள் விஜயமொன்றை மேற்கொண்டு எதிர்வரும் திங்கட்கிழமை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். அவரின் விஜயத்தின் போது நல்லெண்ண நடவடிக்கையாக இலங்கைக்கு சில ஆயுதங்களையும் இந்திய அன்பளிப்பாக வழங்கும் என எதிர்பார்க்கப்படுவதாக பி.ரி.ஐ.செய்திச்சேவை தெரிவித்துள்ளது.

தோளில் வைத்து ஏவப்படும் ஏவுகணைகள் போன்றவையும் இவற்றில் அடங்கும். இலங்கையில் ஆதிக்கம் செலுத்துவதற்கு சீனா முயற்சித்து வரும் பின்னணியில் இலங்கையின் பாதுகாப்பு ஆற்றலை (16ஆம் பக்கம் பார்க்க)

## நல்லிணக்க ஆணைக்குழுவில் புலிகளின் ஆதரவாளர்கள்

### தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் தேசிய நல்லிணக்க ஆணைக்குழு விற்குள்ளும் புலிகளின் ஆதரவாளர்கள் சிலர் இருப்பதாக தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாஸ அமரசேகர குறிப்பிடுகின்றார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே அவர் இதனைக் கூறினார். (16ஆம் பக்கம் பார்க்க)

## போர்க்குற்றச் செயல்களில் புலிகளே அதிகம் ஈடுபட்டனர்

### ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

(கொழும்பு)

கூடுதலான போர்க் குற்றச்செயல்களை தமிழீழ விடுதலைப்புலிகளே மேற்கொண்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். கண்டி அஸ்கிரிய பீடாதிபதியை சந்தித்தபோது அவர் இதனை குறிப்பிட்டதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அதிகளவான (16ஆம் பக்கம் பார்க்க)

சுந்தர்சன் மானிப்பாய்

மாபெரும் மலிவு விற்பனை - அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசில் வென்றோர்

Washing Machine
A.இலக்குமணன் - கண்டிக்குளி

21" LG Colour TV
M.முருகவேள் - இணுவில்

14" Haier Colour TV
N.ராஜிதமதி - நல்லூர்

Mobile Phone
S.இரவிக்குமார் - சுன்னாகம்
V.கௌரிமனோகரி - வட்டுக்கோட்டை
V.துளசிதரன் - அளவாய்

Home Theater
K.ராஜன் - அரியாலை
S.ராஜன் - சுதுமலை

Pedestal Fan
A.J.சவுந்தரநாயகம் - மானிப்பாய்

Table Fan
S.பாலசிங்கம் - நல்லூர்

Sandwich Toaster
K.விஜயகுமார் - வட்டுக்கோட்டை
R.கோபாலராஜா - ஆனைக்கோட்டை
T.தனலட்சுமி - பண்டத்தரிப்பு
V.தவமணி - நல்லூர்
P.சூரியகலா - கந்தர்மடம்

Jug Kettle
A.மேரிஷாமினி - பருத்தித்துறை
T.இரவிந்திரன் - நவாலி
K.கிருத்திகன் - கொக்குவில்
S.கந்தசாமி - மானிப்பாய்
S.சண்முகலிங்கம் - கோண்டாவில்

Iron Box
R.சோதீஷ் - உடுவில்
V.தயாகரன் - யாழ்ப்பாணம்
S.கணேஷ்வரன் - யாழ்ப்பாணம்
M.கெங்காதரன் - பண்டத்தரிப்பு
R.கீர்த்திபன் - ஆனைக்கோட்டை

Hot Plate
S.விஜயகுமார் - சுழிபுரம்
K.சிவதாஸ் - வட்டு தெற்கு
K.யோகராஜா - கண்டிக்குளி
V.வைஷ்ணவி - வட்டுக்கோட்டை
M.பாலசுப்ரமணியம் - கோண்டாவில்

NIBM BUILDING COMPETENCIES Jaffna யாழ்ப்பாணம்

A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development




ஒளிமயமான எதிர்காலத்திற்கு NIBM வழிகாட்டும்

நாட்டின் நம்பிக்கை வாய்ந்த உயர் கல்வி நிலையம் வழங்கும் முகாமைத்துவ, தகவல் தொழில்நுட்ப மற்றும் ஆங்கில கற்கை நெறிகள் மூலம் வெற்றிகரமான எதிர்காலத்தில் அடியெடுத்து வையுங்கள்

- மனிதவள முகாமைத்துவத்தில் அடிப்படைக் கற்கை நெறி (ஆங்கிலத்திலும் தமிழிலும்)
- கணனித் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- வியாபார முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை நெறி
- ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கை நெறி

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, (யாழ் இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக) யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

அனுமதிகள் ஆரம்பமாகியுள்ளன! முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாது நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழ் மக்கள் மீது ராகுல் காந்திக்கு காலம் கடந்த ஞானம் ஏற்பட்டுள்ளது

## கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண கிண்டல்



(கொழும்பு)

இலங்கைத் தமிழ் மக்கள் மீது ராகுல் காந்திக்கு காலம் கடந்த ஞானம் ஏற்பட்டுள்ளதாகத் தான் கருதுவதாக இடதுசாரி விடுதலை முன்னணியின் தலைவர் டாக்டர் விக்கிரமபாகு கருணாரட்ண தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் நாட்டிற்கு இருநாள் பயணத்தை மேற்கொண்டுள்ள காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி அங்கு இலங்கைத் தமிழ் மக்கள் மீதான அக்கறையை வெளியிட்டுள்ளார். இதன் மூலம்தமிழ்மக்களின்பிரச்சினையை அவர் உணர்ந்துள்ளதுடன் தீர்க்கப்பட வேண்டியுள்ளது என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

இது காலம் கடந்த ஞானம் என்றே நான் கருதுகின்றேன் இன்றைய பேரினவாத ஆட்சியாளர் நிலைபெறுவதற்கும்பேரினவாதத்தை உச்சரிப்போருக்கும் இந்திய அரசே பக்கபலமாக இருந்தது. இது வெளிப்படையானது ஆகும்.

மேலும் போர் உச்சக்கட்டம் அடைவதற்கு முன் உண்மையில் இந்திய அரசு கூறுவது போன்று விடுதலைப்புலிகள்பயங்கரவாதத்தை நினைத்திருந்தால் தனியாகக்கையாண்டிருக்கலாம்.

எது எப்படி ஆயினும்அவர்களைச் சுற்றியுள்ள இலங்கைத் தமிழ் அரசியற் கட்சிகளின்அணியுடன்இலங்கை அரசை பேச்சுவார்த்தை நடத்த வைத்து ஒரு அதிகாரப் பகிர்வு நிலையை நோக்கி முன்னேறியிருந்தால் விடுதலைப் புலிகள் தனிமைப் படுத்தப்பட்டிருப்பர்.

ஆனால், எதையும் இந்திய அரசு செய்யவில்லை. மாறாக இலங்கையின் பேரினவாதத்திற்கு முற்றுமுழுதாக ஆதரவினை வழங்கியதுடன் தமிழ் மக்களின் ஆதரவுப் போராட்டத்தை முற்றுமுழுதாக அழித்ததே இந்தியாவின் சாதனையாகும்.

13 ஆவது அரசியல் திருத்தத்திற்கு மேல் அதிகாரத்தை வழங்குவதன் மூலம் தமிழ் மக்களை தமது பக்கம் கவர்ந்திழுக்க முடியும். அதனை அவர்கள் செய்யவில்லை.

தற்போது இந்திய அரசைப் பார்க்கின்ற போது மாதன முத்தாவின் கதையே ஞாபகம் வருகின்றது. முதலில் ஆட்டைக் கொன்று பானையை உடைத்ததாகவே தமிழ் மக்களின் பிரச்சினை மாறியுள்ளது என்றார். (ச)



வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீள்குடியமர்ந்த விவசாயிகள் 71 பேருக்கு போரூட் நிறுவனத்தினால் நீர் இறைக்கும் இயந்திரம் நேற்று வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், போரூட் நிறுவன பணிப்பாளர் திருமதி சுமதி தனபாலசிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா பயனாளி ஒருவருக்கு இயந்திரத்தைக் கையளிப்பதையும் படங்களில் காணலாம். *(படங்கள்: எஸ்.கரன்)*

## அடையாள அட்டைகள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் கண்டெடுக்கப்பட்ட ஐந்து அடையாள அட்டைகள் வைத்தியசாலைக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

உரியவர்கள் நேரில் வந்து பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகள் வருமாறு,

1. கோவிந்தராசா இரத்தினம் - 154211 (150, குமரபுரம், பரந்தன்)
2. சின்னத்துரை இந்திராணி - 0903029937V (சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி)
3. அகுல்வனா தவக்குகன் - 875983377V (ஆவரங்கால் மேற்கு, புத்தூர்)
4. செல்வநாதன் தனுசா - 876753057V (வேம்படி, துன்னாலை தெற்கு, கரவெட்டி)
5. நடராசா பாக்கியம் (8ம் வட்டாரம், வேலணை மேற்கு) (ச-2)

## இரத்ததான முகாம்

வல்வை நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழகம்மற்றும்பார்வதி இலவச ஆங்கிலக் கல்வி நிலையம் என்பவற்றின் அனுசரணையுடன் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திச் சபை ஏற்பாட்டில் நடைபெறும் இரத்ததான முகாம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வல்வெட்டித் துறை வைத்தியசாலையின்சிகிச்சை மண்டபத்தில் நடைபெறும். இவ் இரத்ததான முகாமில் கலந்து கொண்டு உதவுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ச)

## தரம்-6 க்கு அனுமதித்தல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முரசுமோட்டை முருகானந்த மகாவித்தியாலயத்தில் தரம் 6 மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்களை எதிர் வரும் 3 ஆம் திகதி பெற்று 5 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அதிபர் ரி.வரதன் அறிவித்துள்ளார்.

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலமான வகுப்புக்களுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## சமுர்த்தி செயலணியின் நத்தார் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வங்கியின் நத்தார் விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு பாசையூர் அந்தோனியார் கோவில் திருமண மண்டபத்தில் யாழ்.சமுர்த்தி மகா சங்க முகாமைத்துவப் பணிப்பாளர் ம.கியூமன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி, சிறப்பு விருந்தினர்களாக சமுர்த்தி உதவி ஆணையாளர் தி.மகேஸ்வரன், உதவித் திட்டப் பணிப்பாளர் க.சிவச்சந்திரன், கணக்காளர் வே.வேல்நிதி ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (ச)




## விஞ்ஞான பாடச் செயலமர்வு

க.பொ.த. (உ/த) விஞ்ஞானப் பிரிவு மாணவர்களுக்கான செயலமர்வு நாளை மறுதினம் 27ம் திகதி திங்கட்கிழமை ஆண்களுக்கு யாழ்.மத்திய கல்லூரியிலும் பெண்களுக்கு யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையிலும் நனோ தொழில்நுட்பம் பேராசிரியர் இரவிராஜனும் மூலக்கூற்று உயிரியல் கலாநிதி நோபிள் சுரேந்திரன், கலாநிதி ஈஸ்வரமோகன் ஆகியோரால் நடத்தப்படும். இதில் தரம் 13 (2011) பிரிவு மாணவர்கள் அனைவரையும் கலந்து பயனடையுமாறு தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் அறிவித்துள்ளது. அத்துடன் பிரத்தியேக வகுப்புக்களை நடத்துவோர் இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுள்ளனர். (ச)

## மனிதக் கடத்தலை தடுத்து நிறுத்த கடற்படைக் கண்காணிப்பு தொடரும்

### கடற்படைத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தற்பொழுது மனிதக் கடத்தல்கள் குறைந்துள்ள போதும் இந்து சமுத்திரப் பகுதியில் மனிதக் கடத்தல்களை தடுக்கும் நோக்கத்தில் இலங்கைக் கடற்படை கண்காணிப்பு மற்றும் புலனாய்வு நடவடிக்கைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருவதாகக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திசர சமரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே கடற்படைத் தளபதி மேற்கண்டவாறு கூறினார். அங்கு அவர் தொடர்ந்து கூறுகையில்,

விடுதலைப் புலிகள் உட்பட மனிதக் கடத்தல்களில் ஈடுபடுவதாகச் சந்தேகிக்கப்படும் நபர்களைக் கைது செய்வதற்கு அவுஸ்திரேலியா மற்றும் இந்தியக் கடற்படைகள் எமது கடற்படைக்கு ஒத்துழைப்புக்களை நல்கி வருகின்றன.

நாட்டின் கடல் எல்லையைக் கடப்பதற்கு வசதியானவை என்று கருதப்படும் இடங்களை நாம் கடுமையாகக் கண்காணிக்கின்றோம். இவர்கள் நாட்டின் தென்பகுதியில் பல்வேறு புதுப்புது இடங்களூடாக நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள்.

மனிதக் கடத்தலை பூரணமாகத் தடுக்க முடியாது. அவர்கள் இப்போது விமானம் மூலம் வேறு நாடுகளுக்குச் சென்று அங்கிருந்து படகுகள் மூலம் தாம் போக விரும்பும் நாடுகளுக்குச் செல்லுகின்றனர்.

இலங்கைக் கடற்படையின் வைரவிழா நிகழ்வில் கலந்து கொள்வதற்காக இலங்கை வந்த அவுஸ்திரேலிய கடற்படைத் தளபதி, மனிதக் கடத்தலைத் தடுப்பதற்கு இலங்கை மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டியதாகவும் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திசர சமரசிங்க மேலும் தெரிவித்தார்.

## தேசிய பாதுகாப்புதினம் நாளை தேசிய கீதம் எந்த மொழியில்?

நாளைய தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள தேசிய பாதுகாப்புத் தினத்தில் தேசிய கீதம் எந்த மொழியில் இசைக்கப்படும் என்ற வாதப்பிரதிவாதம் எழுந்துள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில் சிங்களத்தில் தேசிய கீதத்தை பாடுவதற்காக நேற்று யாழ். நகரில் பாடசாலை மாணவர்கள் பயிற்சி பெற்றதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தேசிய கீதத்தை அந்தந்தப் பிரதேசங்களுக்கு ஏற்றவாறு சிங்களம் அல்லது தமிழில் பாட முடியும் என தேசிய மொழிகள் நல்லிணக்க அமைச்சர் வாசுதேவ நாணயக்காரவும், ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெலவும் தெரிவித்திருந்த நிலையில்,

தேசிய கீதத்தை சிங்களத்தில் பாடும் பயிற்சியை யாழ்ப்பாண மாணவர்கள் பெற்றுக் கொண்டமை தமிழ் மக்களிடையே சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. (ந)

## சாரதிகள் ஆசனப்பட்டி அணிவது கட்டாயம்

ஆங்கில இலக்கத்தகடு கொண்ட வாகனங்களைச் செலுத்துபவர்கள் ஆசனப்பட்டி அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. அத்துடன் கராஜ் இலக்கம் அல்லது சி.சி. இலக்கத்துடன் வாகனங்களைச் செலுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது.

இறக்குமதி மோசடிகளைத் தடுப்பதற்காக கராஜ் இலக்கம் அல்லது சி.சி. இலக்கத்துடன் வாகனங்களைச் செலுத்துவது உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தடை செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

வாகனம் செலுத்தும்போது செல்லிடத் தொலைபேசிகளில் உரையாடுவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (ச)

## சடலத்தைப் பொறுப்பேற்கவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் 27 ஆம் விடுதியில் கடந்த 17ம் திகதி அனுமதிக்கப்பட்ட பி.இராசரட்ணம் என்பவர் கடந்த 20ம் திகதி இறந்து விட்டார். இவருடைய சடலம் யாழ். போதனா வைத்தியசாலைப் பிரேத அறையில் உள்ளது. இவருடைய சடலத்தை இதுவரை எவரும் உரிமை கோராது இருப்பதால் உரித்துடையோர் மூன்று நாட்களுக்குள் பொறுப்பேற்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## கிறிஸ்மஸ்

வலதுகை கொடுப்பது இடதுகைக்குத் தெரியக்கூடாது என்று சொல்வார்கள். ஆனால் இப்பொழுதெல்லாம் அப்படியா இருக்கிறது? வலதுகை வாங்குவது இடது கைக்குத் தெரிவதில்லை.

வாழ்நாள் முழுவதும் கொடுக்கிறது யாரென்று தெரியாமலே கொடுத்து விட்டுப்போன பெரியவர் ஒருத்தர் உண்டு.

கி.பி.4 ஆம் நூற்றாண்டில் ஹங்கேரி நாட்டில் சாந்தா கிறாஸ் என்ற பாதிரியார் வாழ்ந்து வந்தார். அவர் மிகவும் இளகிய மனம் படைத்தவர். தயாளகுணம் கொண்டவர்.

அவர் என்ன செய்வார் தெரியுமா?

தினமும் நள்ளிரவில் கிளம்பி ஏழை, எளியவர்கள் வீடுகளுக்கெல்லாம் போவார். அவரவர் தகுதிக்கேற்ப சில பொற்காசுகளை அவர்களின் வீட்டு வாசற்படிக்குப் பக்கத்தில் வைத்து விட்டு வந்து விடுவார்.

இவர் இப்படி வைத்துவிட்டு வருவது யாருக்கும் தெரியாது. காலையில் அந்த வீட்டுக்காரர்கள் கதவைத் திறக்கும்போது இந்தப் பொற்காசுகள் அவர்களுடைய கண்ணில்படும். உடனே அவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டுப் போய்விடுவார்கள். யார் இப்படிக் காசு வைத்துவிட்டுப் போகிறது என்ற விடயம் கடைசி வரைக்கும் அவர்களுக்குத் தெரியவேயில்லை. இந்த விடயம் ஒரு பெரிய மர்மமாகவே இருந்தது. ஊர் முழுவதும் பெரிய பரபரப்பாகிவிட்டது.

யாருக்கும் தெரியாமல் வீட்டுக்கு வீடு யார் இப்படிக் காசு வைத்து விட்டுப் போகிறது என்ற உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டுமென்று பலர் முயற்சி செய்து பார்த்தார்கள். யாராலும் அதைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இப்படியிருந்தும் கூட அதற்குப் பின்னரும் அந்தப் பாதிரியார் அவருடைய வேலையை நிறுத்தவில்லை. யாருக்கும் தெரியாமல் வீட்டுக்கு வீடு போய் காசு வைத்துக் கொண்டு தான் இருந்தார்.

அந்தப் பெரியவர் திடீரென்று ஒருநாள் இறந்து விட்டார். அதற்குப் பின் தான், இதுவரைக்கும் இப்படிக்காசு வைத்துக் கொண்டு வந்தது அந்தப் பெரியவர்தான் என்ற விடயம் எல்லோருக்கும் தெரியவந்தது. அதிலிருந்து அவரை ஒரு தெய்வமாகவே நினைத்து எல்லோரும் கொண்டாட ஆரம்பித்து விட்டார்கள்.

அந்தப் பாதிரியாரின் பெயர் 'நிக்கொலஸ்' என்பது தான். இருந்தாலும் அவரை எல்லோரும் செயின்ட் நிகொலஸ் என்று குறிப்பிட ஆரம்பித்தார்கள். எல்லோருக்கும் பொற்காசுகளை கொடுத்துக் கொண்டு வந்ததால் அவரைக் கடவுள் அருள் பெற்றவராகவே நினைத்து அப்படிக் குறிப்பிட்டார்கள். செயின்ட் நிகொலஸ் என்ற பெயர் காலப்போக்கில் மருவி எல்லோரும் சுலபமாக உச்சரிக்கக் கூடிய வகையில் 'சாந்தா கிளஸ்' என்று ஆகிவிட்டது. இப்பொழுதும் அதே பெயர்தான் இருந்து கொண்டிருக்கிறது.

அமெரிக்காவில் இந்தியானா என்ற நகரத்தில் உள்ள 'சாந்தா கிளஸ்' என்ற பூங்காவில இந்தப் பாதிரியாரின் நினைவாக ஒரு பெரிய சிலை வைத்திருக்கிறார்களாம்.

இச்சிலை 22 அடி உயரமும் 40 தொன் எடையும் கொண்டது. இதுபோன்று வேறெங்கும் இவருக்கு சிலை இருப்பதாகத் தெரியவில்லை.

நேற்றிரவே (டிசம்பர் 24) சின்னப் பிள்ளைகளெல்லாம் அவர்களுடைய புதிய ஆடை, விளையாட்டுச் சாமான்கள் எல்லாவற்றையும் ஒரு பையில் போட்டுக் கட்டி அவர்களுடைய படுக்கைக்குப் பக்கத்தில் வைத்திருப்பார்கள். இன்றைக்குக் காலையில் எழுந்தவுடன் இந்தப் பையைப் பிரித்து உள்ளே இருக்கும் பொருட்களைப் பிரித்து வணங்கிவிட்டுத்தான் படுக்கையை விட்டு நகர்ந்திருப்பார்கள். சாந்தா கிளஸ் பாதிரியார் நள்ளிரவில் வந்து இதையெல்லாம் பரிசாக கொடுப்பதாக ஒரு நம்பிக்கை.

முதலில் சின்னப் பிள்ளைகளுக்குத் தான் பரிசு வழங்கும் பழக்கம் ஏற்பட்டது. அதற்குப் பின் தான் பெரியவர்களுக்கும் பரிசு கொடுக்கும் பழக்கம் வந்தது. இங்கிலாந்து ராஜாவான முதலாவது எட்வேட்டுக்கு பிரான்ஸ் நாட்டு ராஜா ஒரு கிறிஸ்மஸ் பரிசு கொடுத்தார். அது என்ன தெரியுமா?

ஒரு பெரிய யானை.

ஜேம்ஸ் என்ற ராஜாவின் காலத்தில் ஸ்பெயின் நாட்டு அரசன் ஒரு யானையுடன் 5 ஒட்டகங்களையும் சேர்த்து கிறிஸ்மஸ் பரிசாக இங்கிலாந்துக்கு அனுப்பினானாம்.

மயிலைக்கூட பரிசாகக் கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுதெல்லாம் வாழ்த்து அட்டை அனுப்புவது அதிகமாக பழக்கத்திற்கு வந்து விட்டது. இப்படியெல்லாம் இயேசுநாதர் பிறந்த நாளைக் கொண்டாடுவது எதற்காக?

சமாதானம் – அன்பு – மனித்நேயம் என்பவற்றை எல்லோரும் புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காகத்தான். மனித நேயத்துக்கெல்லாம் இப்பொழுது சரியான பஞ்சம் ஏற்பட்டு விட்டது.

இரண்டு நண்பர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். ஒருத்தர் சொன்னார்.

"நான் நிறைய பாவம் பண்ணியிருக்கிறேன். அதனால் நரகத்துக்குத்தான் போவேன்" என்றார்.

உடனே அவருடைய நண்பர்,

"நானும் உங்களோடு நரகத்துக்கு வந்துவிடுவேன்" என்றார்.

இதைக்கேட்டதும் அவருக்கு அன்பு மிகுதியால் ஆனந்தக் கண்ணீரே வந்துவிட்டது.

நட்பென்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும் என்று நினைத்தார்.

"ஏன் அப்படிச் சொல்றீங்க? என்னோடு நரகத்துக்கு வந்து விடுவேன் என்று" எனக்கேட்டார்.

அதற்கு அந்த ஆள்,

"நரகத்தில் மனுஷனை எண்ணெய்க் கொப்பரையில் போடுவார்களாமே அது எப்படி இருக்குமென்று பார்ப்பதற்கு ஆசையாக இருக்கிறது. அதுதான் உங்களை எப்படி போடுகிறார்கள் என்று பார்க்கலாமே என்று ஆசைப்பட்டு அப்படிச் சொன்னேன்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நூற்றுக்கணக்கான ஏக்கர் வயல்களில் அறக்கொட்டியான் தாக்கம் அதிகரிப்பு

(பூநகரி)

பூநகரி பிரதேசத்தில் நூற்றுக் கணக்கான ஏக்கர் வயல்களில் அறக்கொட்டியான் தாக்கம் அதி கரித்துள்ளது.

அண்மையில் பெய்த பெரு மழையை தொடர்ந்து யூரியா வளமாக்கி இடப்பட்ட வயல்களில் பயிர்கள் பச்சைப் பசேலென வளர்ந்து குடலை வருவதற்கு தயாராகி உள்ள நிலையில் மேற்படி நோய்த் தாக்கம் அதிகரித்துள்ளமையால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர்.

மேற்படி தாக்கத்தினால் பயிர்கள் திடீரென பச்சைத்தன்மை மாறி வெண்மை அடைந்து தேய்ந்து காணப்படுகிறது.

இதனை கட்டுப்படுத்துவதற்கு கிருமிநாசினிகளை கூடுதலான விலைகொடுத்து வாங்க வேண்டியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நோய் வெகுவேகமாக பரவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

(ஸ்ரீ-3-84)

# வங்கியில் சேமிப்பிலிட்ட பணம் வழங்கல்

(பூநகரி)

ஜனவரி மாதம் முதல் வாரத்திலிருந்து சகல பொது அமைப்புகளும் தாம் கிளிநொச்சி இலங்கை வங்கியில் சேமிப்பில் இட்ட பணத்தை எதுவித சிரமமுமின்றி பெற்றுக்கொள்ள முடியுமென கிளிநொச்சி இலங்கைவங்கிக்கிளையின் முகாமையாளர் தெரிவித்தார்.

மாதர் கிராம முன்னேற்றச் சங்கங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகள் ஆகியன கிளிநொச்சி இலங்கை வங்கியில் சேமிப்பில் இட்ட பணத்தை பெற்றுக் கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஸ்ரீ-3-84)

# கரும்பலகைகளுக்கு பதிலாக பச்சைப்பலகைகள்

நாட்டிலுள்ள பாடசாலைகளுக்கு கரும்பலகைகளுக்குப் பதிலாக, பச்சைப் பலகைகளை வழங்குவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியமைச்சின் கேட்போர் கூடத்தில் கல்வியமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் அண்மையில் நடைபெற்ற முக்கிய கூட்டமொன்றிலே மேற்படி விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கரும்பலகைகளில் வெண்கட்டிகளால் எழுதுவதனால் அது மாணவர்களின் கண்களில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என விஞ்ஞான ஆய்வு ரீதியில் கண்டறியப்பட்டுள்ளது.

அதனை அடிப்படையாகக் கொண்டே கரும்பலகைகளுக்குப் பதிலாக பச்சைப் பலகைகளை வழங்குவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இந்த புதிய திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் சுமார் 3ஆயிரம் பாடசாலைகளுக்கு பச்சைப் பலகைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 180 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 180 | 160 | 180 |
| தக்காளி | 70 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 70 | 100 | 80 |
| கரட் | 80 | 100 | 80 |
| பூசணி | 50 | 40 | 40 |
| புடோல் | 80 | 120 | 90 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 240 | 180 |
| பெரிய வெங்காயம் | 150 | 200 | 160 |
| பாகற்காய் | 180 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 |
| கருணைக் கிழங்கு | 50 | 80 | 60 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 |
| லீக்ஸ் | 120 | 140 | 100 |
| பீற்றூட் | 100 | 160 | 90 |
| கறிமிளகாய் | 200 | 250 | 200 |
| முருங்கைக்காய் | 250 | -- | -- |
| போஞ்சி | 100 | 120 | 140 |
| கத்தரிதம்புள்ள | 100 | 140 | 100 |
| கீரை – 1 பிடி | 40 | 50 | 35 |
| தேசிக்காய் | 80 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 50 | 45 |

# நத்தார் விழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனத்தின் வருடாந்த நத்தார் விழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு நிறுவன மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சிறுவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

(ஸ்ரீ-2-9)

# இராசி பலன்

*25.12.2010*
*(மார்கழி 10, சனிக்கிழமை)*
*சதுர்த்தி காலை 8.24 மணிவரை*
*பஞ்சமி பின்னிரவு 6.13 மணிவரை*
*ஆயிலியம் பிற்பகல் 1.26 மணி வரை*
*இராகுகாலம் 9.26–10.56 மணிவரை*
*சுபநேரம் 3.26–4.56 மணிவரை*
*பாலன் பிறப்பு பெருநாள்,*
*நத்தார் பண்டிகை.*

**மேடம்** இனிமையான நாள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து செயற்படுவர், அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ள முற்படுவீர்கள், பூமியால் ஆதாயம் கிடைக்கலாம்.

**இடபம்** அஞ்சல் வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரும் நாள், தாய்வழி உறவில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கலாம், சுப செலவுகள் செய்யும் எண்ணம் மேலோங்கும்.

**மிதுனம்** புறம்பேசுபவர்களை இனங் கண்டு கொள்வீர்கள், பிரயாண நன்மையுண்டு, சுவாரஸ்யமான நாள், தொழில் வருமானம் திருப்தி தரும்.

**கடகம்** உங்களின் சிறந்த சிந்தனைக்கு பாராட்டுக்கள் கிடைக்கலாம், சொத்துக்கள் வாங்க போட்ட திட்டங்கள் வெற்றி பெறும், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**சிங்கம்** தேவையற்ற கற்பனைகள் அதிகரிக்கும், திட்டமிட்ட காரியங்களில் சிறுமாற்றங்கள் செய்யும் எண்ணம் உருவாகும், ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை.

**கன்னி** சயனசுகக் குறையுண்டு, காரிய அலைச்சல் உண்டு, சுபசெலவுகள் அதிகரிக்கும் நாள், ஆறுமுகப் பெருமான் வழிபட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வருவார், பணப்புழக்கம் அதிகரிக்கும், குடும்பத் தேவைகளை நிறைவு செய்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்** எடுத்த காரியங்களில் வெற்றி கிடைக்கும், பொருளாதார நிலை உயரும், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம், தொழிலில் எதிர் பார்த்த வளர்ச்சி ஏற்படலாம்.

**தனுசு** ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், வெறுத்தவர்கள் மீண்டும் உதவிக்கரம் நீட்டலாம், தன்னம்பிக்கை அதிகரிக்கும், பிரயாண நன்மையுண்டு.

**மகரம்** குடும்பத்தில் சிறு மனஸ்தாபங்கள் ஏற்படலாம், உடல் ஆரோக்கியத்தில் கவனமெடுப்பீர்கள், பிரயாணத்தில், பொருட்களில் கவனம் தேவை.

**கும்பம்** மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள்,தேகநலம் ஆரோக்கியமாக காணப்படும், சென்ற இடத்தில் செல்வாக்கு அதிகரிக்கும்.

**மீனம்** உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், உடல் நலத்தில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், தொழில்வளர்ச்சி ஏற்படும், பொருட்சேர்க்கையுண்டு

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தும்பளை யோகசாந்தி நிலையத்தில் யோகா பயிற்சி பெற்றமைக்காக அந் நிலையத்திற்கு எம்.எஸ்.எவ்.வைத்திய அதிகாரி ஹெய்டி குறூஸ் 5ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கினார். அப்பணத்தை யோகசாந்தி நிலையத்தினர் சிவப்பிரகாச மகாவித்தியாலயத்திற்கு வழங்கினர். இதனை அதிபர் கே.கே.யோகநாதனிடம் வைத்திய அதிகாரி ஹெய்டி குறூஸ் வழங்குவதையும் பாடசாலை மாணவர்களுடன் யோகசாந்தி நிலையத்தினரையும் படங்களில் காணலாம்.

## திருவாசக முற்றோதல்

இந்துசமயப் பேரவையில் ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத தில்லை நடராஜர் கோயிலில் திருவாசக முற்றோதல் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு இந்துசமயப் பேரவையினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-9)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துன்னாலை வடக்கிலுள்ள பரந்தாமன் ஆச்சிரமத்தில் மார்கழி மாத ஞாயிற்றுக் கிழமைகளில் காலை 7 மணி முதல் 2 மணிவரை திருவாசக முற்றோதல் இடம்பெற்று வருகின்றது.

இதில் அடியார்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஆச்சிரமத்தினர் கேட்டுள்ளனர். (ஸ்ரீ)




## வீடொன்றில் புகுந்த நால்வர் குடும்பஸ்தரை வாளால் வெட்டினர்

### கரணவாய் பகுதியில் சம்பவம்

(கரவெட்டி)

வடமராட்சி கரணவாய் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இரு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் கொண்ட குழு வீடொன்றுக்குள் புகுந்து அங்கிருந்த குடும்பஸ்தர் ஒருவரை வாளால் வெட்டி காயப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கரணவாய் மேற்கு வல்லியாவத்தைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் குமாரன் செல்லன் (வயது 63) என்பவரே வாள்வெட்டுக்கு இலக்காகியுள்ளார்.

சம்பவ தினம் மோட்டார் சைக்கிள்களில் வீட்டிற்கு வந்த 4 பேர் கொண்ட குழு குடும்பஸ்தரின் மகனை பெயர் சொல்லி அழைத்துள்ளனர்.

அச்சமயம் குறித்த வீட்டுக்காறரின் மகன் வீட்டில் இருக்கவில்லை. அதனால் குடும்பஸ்தர் யார் என்பதை வினவுவதற்கு வீட்டு வாசலுக்கு வந்துள்ளார்.

திடீரென்று அக்குழுவைச் சேர்ந்த ஒருவர் குடும்பஸ்தரை தலையில் வாளால் வெட்டியுள்ளார்.

பின் அவர்கள் நால்வரும் மோட்டார் சைக்கிளில் தப்பிச் சென்றனர். இச்சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-3-24)

## வாள்வெட்டு சம்பவத்தில் சிறுவன் படுகாயம்

(கரவெட்டி)

இரு குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறில் சிறுவன் ஒருவரை எதிர்த்தரப்பினர் வாளால் வெட்டிய சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் காலை 11 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் கற்கோவளம் புனிதநகர்ப் பகுதியைச் சேர்ந்த செல்வநாயகம் சசிக்குமார் (வயது 13) என்ற சிறுவனையே எதிர்த்தரப்பினர் வாளால் வெட்டியுள்ளனர்.

மேற்படி சிறுவன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுதொடர்பாக பருத்தித்துறை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-24)

## நாட்டியாஞ்சலி

(கொழும்புத்துறை)

இந்தோ கனடா நடன அக்கடமி அதிபரும் கனடா திருமறைக் கலாமன்ற நடன ஆசிரியருமான செல்வி தட்ஷாயினி மணிவாசகன், செல்வி.ஜெயதருணி ஜெயபாலேந்திரன் ஆகியோரின் நாட்டியாஞ்சலி நிகழ்வு எதிர் வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5மணிக்கு திருமறைக் கலாமன்ற கலைத்தூது கலையகத்தில் யாழ். பல்கலைக் கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை , நடனத்துறை விரிவுரையாளர் கலா கீர்த்தி ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன் கலந்து கொள்ளவுள்ளார்.சிறப்பு விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி, நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளராக திருமறைக் கலாமன்ற பிரதி இயக்குநர் யோ.யோன்சன் ராஜ்குமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-51)

## திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சிவன் ஆலயப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆலயத்திற்கு தரிசனம் செய்ய வரும் பக்தர்களின் துவிச்சக்கரவண்டிகள் மற்றும் உடமைகள் இனந்தெரியாதவர்களால் திருடப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து ஆலய நிர்வாகம் ஆலயத்தின் உள்பகுதியில் பொதுமக்கள் விழிப்பாக இருக்கும் வகையிலான சுவரொட்டிகளை ஒட்டியுள்ளனர். (ஸ்ரீ-3-10)

## 30 வருடங்களுக்கும் மேலாக புனரமைக்கப்படாத மயானம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை சுப்பர்மடம் மயானம் 30 வருடங்களுக்கு மேலாக அபிவிருத்தி செய்யப்படாத நிலையில் காணப்படுகிறது.

அங்குள்ள கிணறு மற்றும் மலசல கூடங்கள் துப்புரவு செய்யப்படாது பாவனைக்குதவாத நிலையில் காணப்படுகிறது.

இதனால் சடலங்களைக் கொண்டு வந்து தகனம் செய்வோர் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

அங்குள்ள மடம் சேதமடைந்து இன்னமும் புனரமைக்கப்படாது இடிந்து விழுந்த நிலையில் காணப்படுகிறது.

எனவே உரியவர்கள் இந்த மயானத்தை விரைவாக புனரமைத்துத் தரவேண்டும் என மக்கள் பலரும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-10)

## வீதியோரங்களில் குப்பைகளை கொட்டுவதால் சுகாதார சீர்கேடு

(கரவெட்டி)

புனித நகர் ஆனைவிழுந்தான் பகுதியிலுள்ள வீதியோரங்களில் கழிவுப் பொருட்களை கொட்டுவதனால் துர்நாற்றமும் சுகாதாரச் சீர்கேடும் நிலவி வருவதாக அப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறைப் பிரதேசப் பகுதிகளில் சேகரிக்கும் கழிவுப் பொருட்களை இப்பகுதிகளில் கொண்டு வந்து கொட்டி விட்டு அகற்றுவதற்கான எதுவித செயற்பாடுகளும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் அவ் வீதியால் புனிதநகர் கிராமத்திற்குச் செல்லும் மக்கள் பெரும் சுகாதாரச் சீர்கேடுகளை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே உரிய தரப்பினர் இவ்வாறான செயற்பாடுகளை தவிர்த்து சுகாதாரத்தை பேணுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-24)

## 4 இலட்சம் ரூபா கப்பம் கேட்டு மிரட்டி வரும் கொள்ளைக் கும்பல்

### பருத்தித்துறைப் பொலிஸில் முறைப்பாடு

(கரவெட்டி)

பருத்தித்துறை ஓராங்கட்டை பகுதியிலுள்ள ஸ்ரூடியோக் கடை உரிமையாளரை கொள்ளையர்கள் 4 இலட்சம் ரூபா கப்பம் கேட்டு தொடர்ந்து மிரட்டி வருவதாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஓராங்கட்டைப் பகுதியில் கடந்த 18 ஆம் திகதி இரவு குறித்த கடையின் திறப்பைப் பயன்படுத்தி பின் கதவைத் திறந்து அங்கிருந்த சுமார் 8 இலட்சம் ரூபா பெறுமதியான வீடியோ உபகரணங்கள் கொள்ளையிடப்பட்டன.

இதில் 4 இலட்சம் பெறுமதியான புதிய வீடியோ கமரா, வீடியோ சார்ந்த பொருட்கள் மற்றும் கணனி என்பன கொள்ளையடிக்கப்பட்டிருந்தன.

இதில் அங்கிருந்த வீடியோ உரிமையாளரின் சிம் காட் களவாடப்பட்டிருந்தது. அதன்பின் கொள்ளையர்கள் அச் சிம் காட்டைப் பயன்படுத்தி 4 இலட்சம் ரூபா கப்பமாக கேட்டு உரிமையாளரைத் தொடர்ந்து மிரட்டியுள்ளனர்.

களவாடப்பட்ட பொருட்களை திருப்பித் தருவதாகவும் பணத்தை தம்மிடம் ஓரிடத்தில் வைத்து தருமாறும் மிரட்டி வருகின்றனர்.

இதுதொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-24)

## சமூக சீர்கேடுகளை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை

(கரவெட்டி)

கற்கோவளம் புனிதநகர் கிராமத்தில் அண்மைக் காலமாக சமூக சீர்கேடுகள் அதிகரித்துள்ளன.

அப்பகுதியைச் சேர்ந்த மதுப்பிரியர்கள் இரவு வேளைகளில் மதுபோதையில் வந்து தகாத வார்த்தைப் பிரயோகங்கள், சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் அங்கு கல்வி கற்று வரும் மாணவ சமூகங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக இளைஞர்களும் இளம் குடும்பத்தவர்களுமே இவ்வாறான செயற்பாடுகளில் அதிகம் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பாக உரிய தரப்பினர் இக் கிராமத்தின் அமைதிக்கும் சமூகத்தின் நல்லொழுக்கத்திற்கும் வழிவகுக்க முன்வர வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஸ்ரீ-3-24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கில் மழையுடன் கூடிய காலநிலை நிலவும்

## வளிமண்டலவியல் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் மழையுடன் கூடிய கால நிலை நிலவும் என வளிமண்டல வியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பித்துள் ளதாகவும் எதிர்வரும் நாட்களில் அதிகளவான மழையை எதிர்பார்க்க முடியும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வடமத்திய மாகாணத்திலும் மாத்தளை மாவட்டத்திலும் எதிர்வரும் நாட்களில் மழை பெய்யக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டின் பல பாகங்களிலும் இடை யிடையே மாலை வேளையில் மழை பெய்யக் கூடுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# உள்நாட்டு கைத்தொழில்களை பாதிக்கும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு இடமில்லை

## அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவிப்பு

(கொழும்பு)

உள்நாட்டு கைத்தொழில்களையும் கைத்தொழிலாளர்களையும் பாதிக்கக் கூடிய வகையிலான வெளிநாட்டு முதலீடுகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முதலீடுகளை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக உள்நாட்டு கைத்தொழில்களைப் பாதிக்கும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படமாட்டாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரபல வெளிநாட்டு நிறுவனமொன்று யோகட் உற்பத்திச்சாலையொன்றை நிறுவுவதற்கு அனுமதி கோரிய போதிலும், அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறியளவில் உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களைப் பாதுகாக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதென அவர் தெரிவித்துள்ளார்.



ஒரு மில்லியன் வீட்டுப் பொருளாதார அலகுகளை உருவாக்குவதற்கு அரசாங்கம் முனைப்புக் காட்டி வருவதாகவும் நாட்டு மக்களின் பொருளாதார இயலுமையை அதிகரிக்கும் நோக்கில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ)

# இலங்கைக்கான பயண அறிவுறுத்தலை தளர்த்தியது பெல்ஜியம்

இலங்கைக்கான பயண அறிவுறுத்தலை பெல்ஜியம் தளர்த்தியுள்ளது. இதில் இலங்கையின் வடக்கு- கிழக்கு பிரதேசங்களும் அடங்குகின்றன

பெல்ஜியத்திற்கான இலங்கைத் தூதுவர் ரவீந்திர அரியசிங்க இதனைத் தெரிவித்துள்ளார். கடந்த செப்ரெம்பர் மாதத்தில் பெல்ஜியம் இலங்கைக்கான பயண அறிவுறுத் தலை தளர்த்தியபோதும் அதில் வடக்கு –கிழக்கு பிரதேசங்கள் அடங்கியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

## சாவகச்சேரி பிரதேசசபை

## 01.01.2011 முதல் 30.12.2011 வரை சந்தைகள், இறைச்சிக்கடைகளை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்

கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித்திகதி - 29.12.2010 ந.ப 12.00மணி
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித்திகதி - 29.12.2010 பி.ப 1.00மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி - 29.12.2010 பி.ப 2.00மணி

கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல | குத்தகை விபரங்கள் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (VAT,NBT) தவிர | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (VAT,NBT) தவிர |
|---|---|---|---|---|
| 1 | கொடிகாமம் வண்டி வாகனத் தரிப்பிட நிலையம் (கிழக்கு மேற்கு இருவாயில்) | 413083.00 | 3000.00 | 500.00 |
| 2 | கொடிகாமம் சந்தை கருவாட்டுக்கடை இல-01 | 14295.00 | 1000.00 | 500.00 |
| 3 | கொடிகாமம் சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 39710.00 | 1000.00 | 500.00 |
| 4 | வரணிப் பொதுச்சந்தை | 67507.00 | 1000.00 | 500.00 |
| 5 | கைதடிப் பொதுச்சந்தை | 18365.00 | 1000.00 | 500.00 |
| 6 | கைதடிச்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 83600.00 | 1000.00 | 500.00 |
| 7 | கைதடிச்சந்தை ஆட்டிறைச்சிக்கடை | 37724.00 | 1000.00 | 500.00 |

நிபந்தனைகள்

1. இறைச்சிக்கடைகளுக்கு சபையால் விதிக்கப்படும் மாத வாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்படவேண்டும்.
2. கேள்வித்தொகை, படிவக்கட்டணம், மாத வாடகை என்பவற்றுடன் 12% Vat, 3% Nbt சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
3. வண்டித்தரிப்பிட நிலையத்தில் துவிச்சக்கரவண்டி ரூபா 3.00, மோட்டார் சைக்கிள் ரூபா 5.00, மோட்டார் வாகனம் ரூபா 10.00 என்ற விகிதத்தில் கட்டணம் அறவிடப்படவேண்டும்.
4. சந்தை வளவில் உள்ள கடைகளுக்குத் தெரிவு செய்யப்படும் குத்தகைக்காரர் எவ்வித வரி அறவீடுகளையும் மேற்கொள்ள முடியாது.
5. கால்நடைகள் சுகாதாரப் பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சிக்கடைகளுக்கு கொண்டுவரப்படுதல் வேண்டும்.
6. தெரிவு செய்யப்படும் கேள்விகாரர் ஒரு வாரகாலத்துள் 1/3 பகுதியை முற்பணமாக செலுத்துதல் வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்த மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும். தவறின் 10% தண்டப்பணமாக அறவிடப்படும்.
7. கேள்விப்படிவத்தின் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குத்தகை விபரத்தினை குறிப்பிட்டு அரக்கு முத்திரையிட்டு ஒரு பிரதியினை செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ பதிவுத்தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
8. கேள்விகளைத் தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
9. மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமைப்பணிமனை மற்றும் உப அலுவலகங்களில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:- 14.12.2010 ஆம் திகதி பிரசுரமான மீள் கேள்வி அறிவித்தல் விளம்பரத்தில் கைதடி ஆட்டிறைச்சிக்கடை, மாட்டிறைச்சிக்கடை என்பவற்றிற்குரிய தொகை தவறாக குறிப்பிடப்பட்டது. ஆகையால் திருத்திய தொகை மீளவும் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளமை கவனிக்கப்படவேண்டியதாகும்.

வேலுப்பிள்ளை சிவராஜலிங்கம்
செயலாளர்,
சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
21.12.2010

(சி-1906)

# நிர்வாக சேவை வகுப்பு III இற்கான போட்டிப் பரீட்சை ஒத்திவைப்பு

இலங்கை நிர்வாக சேவையில் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை கால வரையின்றி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது

கொழும்பு மற்றும் யாழ். நகரங்களில் எதிர்வரும் ஜனவரி முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் நடத்தப்பட இருந்த இந்தப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணங்களால் கால வரையின்றி ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அநுர எதிரிசிங்க அறிவித்துள்ளார்.

மீண்டும் பரீட்சை நடைபெறும் திகதிகள் குறித்து விண்ணப்பதாரிகளுக்கும் பரீட்சை செயற்குழுவிற்கும் எழுத்துமூலம் பின்னர் அறிவிக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# புதிய நிர்வாகசபை தெரிவு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் பழம்பெரும் முன்னணி விளையாட்டு கழகமான கிளிநகர் இளம்பறவைகள் விளையாட்டு கழகத்தின் புதிய நிர்வாகசபை தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக கிளிநொச்சி திடீர் மரணவிசாரணை அதிகாரி டாக்டர். கே.வி. கே.திருலோகமூர்த்தி, உபதலைவராக ஜனாப் ஏ. அக்பர், செயலாளராக வி.நிகால் விக்கினேஸ்வரன், உப செயலாளராக மூத்த விளையாட்டு வீரர் வி.கருணா, பொருளாளராக ஜனாப் எம்.எஸ்.ஜின்னா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அவற்றுடன் நிர்வாக உறுப்பினர்களாக எஸ்.சித்தாத்துரை, வி.உதயகுமார், இ.ராஜ்குமார், சி.ஜீவநாயகம் ஆகியோர் தெரிவாகினார்கள். போசகராக கிளிநகர் கிராம அலுவலர் சண்முகநாதன் தெரிவானார். (ஸ்ரீ)




"ஜெய் குருதேவ்"

THE ART OF LIVING

ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் அவர்களின் வாழும் கலைப் பயிற்சி

(மூச்சு பயிற்சி, சுதர்சன கிரியா, பிரணாயாமம், தியானம்,யோகா)


அறிமுக உரை

இடம்:– நெல்லியடி தடங்கன் புளியடி முருகன்கோயில் கல்யாணமண்டபம்
காலம்:– 26/12/2010 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:– மாலை 5.00 – 8.00 மணி
பயிற்சி– 27.12.2010 – 31.12.2010

குறிப்பு:- ஏற்கனவே பயிற்சி பெற்ற அனைவருக்கும் ஒருநாள் நினைவூட்டும் பயிற்சி முகாம்
இடம்:– நெல்லியடி தடங்கன் புளியடி முருகன்கோயில் கல்யாணமண்டபம்
காலம்: –26/12/2010 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:– காலை 9.45– 5.45 மணி
(இ) மதிய உணவு வழங்கப்படும்

தொடர்பு: –0770474757
0776731056


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வசாவிளான் மத்திய மகாவித்தியாலய அபிவிருத்தி பணிகளின் ஒரு கட்டமாக சிரமதானப் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டது. இதில் பாடசாலை அதிபர் எஸ். கனகராசா உரையாற்றுவதையும் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா சிரமதானப் பணியை ஆரம்பித்து வைப்பதையும் பாடசாலை மாணவர்கள், ஊர்மக்கள், ஆசிரியர்கள் சிரம தானப் பணியில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.கரன்)

# இன்புளுவென்சா வைரஸ் காய்ச்சலுக்கு இருவாரங்களில் பதினெட்டுப் பேர் பலி

நாடெங்கிலும் பரவி வரும் இன்புளுவென்ஸா ஏஎச்1என்1 வைரஸ் காய்ச்சலால் கடந்த இரு வாரங்களில் 18 பேர் பலியாகியுள்ளதாக தொற்றுநோய் தடுப்புப் பிரிவின் பிரதம மருத்துவ நிபுணர் சுதத் பீரிஸ் தெரிவித்தார்.

உயிரிழந்திருப்பவர்களில் கூடுதலானவர்கள் இளம் வயதினர்கள் ஆவர்.

தடிமல், இருமல் மற்றும் காய்ச்சல் போன்ற அறிகுறிகள் மூன்று நாட்களுக்கு மேல் நீடிப்பதுடன் மூச்செடுப்பதிலும் சிரமம் காணப்படுமாயின் தாமதியாது மருத்துவ நிபுணர்களை அணுகி சிகிச்சை பெற்றுக் கொள்ளுமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

குறுகிய காலத்தில் 308 பேர் இந்தக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளதுடன் இவர்களில் 18 பேர் உயிரிழந்துள்ளனர்.

இக்காய்ச்சலுக்குக் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவிலானோர் உள்ளாகியுள்ளனர்.

இருமலின் போதும் தும்மலின் போதும் கைக்குட்டைகளைப் பாவிப்பதும் கைகளைச் சவர்க்காரமிட்டுக் கழுவுவதும் மிக மிக அவசியம் என்றும் அவர் வலியுறுத்தினார். (ஸ்ரீ-2)

# கஜமுத்துகள் விற்ற குற்றச்சாட்டில் பிரதேசசபை உறுப்பினருக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

கஜ முத்துக்கள், சிறுத்தைத்தோல் ,சிறுத்தைப்பற்கள் என்பவற்றை விற்பனை செய்த விவகாரத்தில் சம்பந்தப்பட்டதாகக் குற்றஞ் சுமத்தப்பட்ட ஹொரவப் பொத்தானை பிரதேச சபை உறுப்பினர் ஒருவர் எதிர்வரும் ஜனவரி 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு கறுவாத்தோட்டப் பகுதியில் வைத்து கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் இவர் கைது செய்யப்பட்டதாக கொழும்பு நீதவான் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபர் மேற்படி பொருட்களை அநுராதபுரத்திலிருந்து கொழும்புக்கு கொண்டு வந்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

சந்தேக நபர் கொழும்புக்குக் கொண்டு வந்த பொதியில் என்ன இருந்தது என்பதை அறிந்திருக்கவில்லை.

ஹொரவப்பொத்தானையில் வைத்து மற்றொரு நபரால் கொழும்பிலுள்ள ஒருவருக்கு ஒப்படைப்பதற்காக அப்பொதி கொடுக்கப்பட்டது என சந்தேக நபரின் சட்டத்தரணி தனது வாதத்தில் தெரிவித்தார். தனது கட்சிக்காரரை பிணையில் செல்ல அனுமதிக்குமாறு அவர் கோரினார்.

எனினும் சந்தேகநபரை 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# கடவுள் அடிக்கடி ஆச்சரியங்களை நிகழ்த்துவதில் வல்லமையுள்ளவர்

## பாப்பாண்டவர் பதினாறாம் பெனடிக்

கடவுள் அடிக்கடி ஆச்சரியங்களை நிகழ்த்துவார் என பாப்பாண்டவர் பதினாறாம் பெனடிக் தெரிவித்துள்ளார்.

கடவுள் தமது வாக்குறுதிகளை எப்போதும் நிறைவேற்றத் தவறியதில்லை எனவும் அவற்றை நிறைவேற்றும் விதம் ஆச்சரியப்படத்தக்கது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு வழங்கிய விசேட நத்தார் செய்தியில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பெத்லகேமில் அவதரித்த சிசு விடுதலையை பெற்றுக் கொடுத்ததாகவும் அரசியல் வழியிலோ அல்லது இராணுவ வழியிலோ இந்த விடுதலை பெற்றுக் கொடுக்கப்பட வில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தப் புனித காலத்தில் உங்கள் அனைவருக்காகவும் நான் கடவுளிடம் பிரார்த்தனை செய்கின்றேன் எனவும் மரணத்தை மரிக்கச் செய்த கடவுளின் புகழ் உலகெங்கும் பரவட்டும் என அவர் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# மீட்கப்பட்ட கிளைமோர் தொடர்பில் கடற்படையினர் தீவிர விசாரணை

(கொழும்பு)

மன்னார் சிலாவத்துறை பிரதேசத்தில் மீட்கப்பட்ட இரண்டு கிளைமோர் குண்டுகளும் தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களால் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்ற கோணத்தில் தற்போது விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சிலாவத்துறையின் கொக்குப்படையான் பிரதேசத்தில் கடற்படையின் புலனாய்வுத்துறையினரே இந்த குண்டுகளை மீட்டுள்ளனர்.

கிளைமோர் குண்டுகள் இரண்டும் 15 கிலோகிராம் எடை கொண்டவை என்பதுடன் அதிசக்தி வாய்ந்த வெடிமருந்தை கொண்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (ஸ்ரீ-2)

# நிபுணர்குழு இலங்கை வரவுள்ள நிலையில் உண்ணாவிரதத்தை மறந்து விட்டார் விமல்

## ஞாபகப்படுத்துகிறது ஜே.வி.பி



ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு இலங் கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில் அமைச்சர் விமல் வீரவன்ச சாகும் வரையில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதனை மறந்துள்ளதாக ஜே.வி.பி.கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

நாட்டை அபிவிருத்தி செய்வதற்கும் தேசப் பற்றை முன்னிலைப்படுத்தி சுயலாபங்களை அடைவதற்கும் இடையில் பாரிய வேறுபாடு இருப்பதனை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென ஜே.வி.பி. கட்சியின் முன் னாள் பாராளுமன்ற உறுப்பினர் வசந்த வித்தியாரட்ன தெரிவித்துள்ளார்.

மஹியங்கனைப் பிரதேசத்தில் நடைபெ ற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறி ப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் நிபுணர்கள் குழுவினை நிய மித்த காலத்தில் அதீத தேசப்பற்றை வெளிப் படுத்தியோரின் தற்போதைய நிலைமை என்ன என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

சிலர் சாகும் வரையில் உண்ணாவிரத மிருந்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளதுடன் நிபுணர்கள் குழு இலங்கைக்கு விஜயம் செய்ய உள்ள நிலையில் விமல் வீரவன்ச சாகும் வரையில் உண்ணாவிரம் இருப்பாரா என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டை அபிவிருத்தி செய்தலுக்கும் தேசப்பற்றை காரணம் காட்டி அரசியல் இலாபங்களை அனுபவித்தலுக்கும் வித்தியாசம் இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# 10இலட்சம் வீட்டுத்தோட்டங்களை அபிவிருத்தி செய்யும் திட்டம்

பத்து இலட்சம் வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்வது தொடர்பாக பொருளாதார அபவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் விசேட ஆய்வுக் கூட்டம் ஒன்று இடம்பெற்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் எண்ணக்கருவான பொருளாதாரத்தை விருத்தி செய்வதற்காக பத்து இலட்சம் வீட்டுத் தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிவு குறித்து இதில் ஆராயப்பட்டது.

இந்த வேலைத் திட்டத்தை செயற்படுத்தும் விதம் பற்றி ஆராய்வதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் தலைமையில் கடந்த 22 ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. (ஸ்ரீ-2)

# நிபுணர்குழு ஏனைய அமைப்புகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தவுள்ளது

## ஐ.நா.தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அமைத்த குழுவை விட ஐ.நா. நிபுணர் குழு விரிவானது. எனவே ஐ.நா.வின் நிபுணர் குழுவானது கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தவிர வேறு அமைப்புகளுடனும் தொடர்புகளை ஏற்படுத்தவுள்ளதாக ஐ.நா.தெரிவித்துள்ளது.

இந்த நிபுணர் குழு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவுடன் மாத்திரம் தொடர்புகளை ஏற்படுத்தாது. பரந்தளவில் தொழிற்படுமென ஐ.நா.வின் பதில் கடமையாற்றும் பிரதி பேச்சாளர் பார்ஹான் ஹக் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் தெரிவித்தார்.

ஐ.நா.வின் நிபுணர் குழுவானது கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுடன் மட்டும் தான் பேசுமா என ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட போது பர்ஹான் ஹக் இவ்வாறு கூறினார்.(ஸ்ரீ-2)

# பாடசாலை மாணவர்களின் புதிய புத்தகப் பைகள் விற்பனை

பாடசாலை மாணவர்களின் நலன்கருதி கல்வியமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்ட விசேட பைகள் தற்போது சந்தைகளில் விற்பனை செய்யப்படுகின்றன.

இந்நிலையில் இந்தப் பைகளுக்கான கட்டுப்பட்டு விலையை தீர்மானிக்குமாறு இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இந்தப்பைகள் உரிய தரத்துடன் செய்யப்பட்டுள்ளனவா? என்பது குறித்தும் ஆராய்ந்து பார்க்கும்படி சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கேட்டுள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளநீர் தேங்காது புனரமைப்பு பணிகள்

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா யாழ். வீரசிங்கம் மண்டபத்திற்கு முன்பாகவுள்ள 4 ஆவது தமிழாராச்சி நினைவாலயம் அமையப் பெற்றுள்ள காணியைப் பார்வையிட்டு அதனை சமப்படுத்தும் நடவடிக்கை குறித்து ஆராய்ந்துள்ளார்.

யாழ். கோட்டைக்கு அருகிலுள்ள இந்தப் பகுதியை சமப்படுத்தும் பட்சத்தில் வீதியோரத்தில் மழை நீர் தேங்கி நிற்காமல் ஓடி விடக்கூடிய சாத்தியக் கூறுகள் குறித்தம் இதன் போது ஆராயப்பட்டது.

இதன் போது அகழ்வாராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்தவர்களுடனும் அமைச்சர் கலந்துரையாடினார்.

இதில் யாழ். மாநகர முதல்வர், யாழ். பல் கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை ஆகியோரும் உடனிருந்தனர்.

தொடர்ந்து ஆஸ்பத்திரி வீதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீதி செப்பனிடும் பணியையும் அமைச்சர் பார்வையிட்டதுடன் துறைசார்ந்தோருடனும் கலந்துரையாடினார்.

(ஸ்ரீ)

# குடாநாட்டில் இடம்பெறும் கொலை, கொள்ளை சம்பவங்களை வன்மையாக கண்டிக்கின்றோம்

## சிறி ரெலோ கட்சி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக தொடர்ந்து இடம்பெற்று வரும் கொலை, கொள்ளை போன்ற நடவடிக்கைளை வன்மையாக கண்டிப்பதாக சிறி ரெலோ கட்சி அறிவித்துள்ளது. இது குறித்து அக்கட்சி வெளியிட்ட அறிக்கையில்,

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக தொடர்ந்து இடம் பெற்று வருகின்ற கொள்ளை , கொலை போன்ற நடவடிக்கைகள் குடாநாட்டு மக்களை மீண்டும் அச்சத்திற்கு உள்ளாக்கியுள்ளன.

கடந்த 30 வருட கொடூர யுத்தத்திற்குள் சிக்குண்டு துன்பப்பட்டு, துயரப்பட்டு உறவுகளை இழந்து நாதியற்று இருந்த எம் மக்கள் ஓரளவு நிம்மதிப் பெருமூச்சுடன் வாழ்ந்து வருகின்ற இக்காலகட்டத்தில் பனையால் வீழ்ந்தவனை மாடு ஏறி மிதித்தது போல மீண்டும் எம் மக் கள் மீது எம்மவர்களாலேயே வேண்டப்படாத செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை எம் மக்களுக்கு பேரிடியாக இருக்கின்றது.

கொள்ளை, கொலை இன்னும் என்னவெல்லாம் இருக்கின்றதோ அவை அனைத்தினையும் யாழ். குடாநாட்டு மக்களுக்கு திணிப்பதற்கு எம்மவர்களே உடந்தையாக இருப்பது அவமானத்திற்கு உரியதாகும். இது போன்ற கீழ்த்தரமான செயற்பாடுகளை தமிழ் மக்களின் நலன் பேணும் கட்சி என்ற வகையில் சிறி ரெலோ கட்சி எதிர்ப்தோடு வன்மையாக கண்டிக்கின்றது.

இவ்வாறான கீழ்த்தரமான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மற்றும் இவர்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ உதவி புரிகின்றவர்கள் தாம் தங்கி வாழ்கின்ற சமூகத்திற்கு கேடுவிளைவிக்காது திருந்த வலியுறுத்துகிறோம். நல்லதோர் சமுதாயத்தினை கட்டி எழுப்ப வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவர் முன்னாலும் இருப்பதனால் மேற்படி குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் பற்றிய அடையாளங்கள் மற்றும் அவர்கள் பற்றிய இரகசியத் தகவல்களை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்து உங்கள் ஒவ்வொருவருடைய பாதுகாப்பையும் நீங்களே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

இதேவேளை இப்பிரச்சினை தொடர்பாகவும் வவுனியா நகரில் இடம்பெற்ற சீட்டு மோசடி தொடர்பாகவும் சிறிரெலோ செயலாளர் நாயகம் ப.உதயராசா பொலிஸ்மா அதிபரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதன் போது இப்பிரச்சினைகள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸ்மா அதிபர் உறுதியளித்துள்ளது குறிப்பிடத்தக்தாகும். (ஸ்ரீ-2)

# தற்போது கடத்தல்கள் இல்லாத இலங்கையை கட்டியெழுப்பியுள்ளோம்

## பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு

யாரும் கடத்தப்படாத சூழ்நிலை கொண்ட, கடத்தல்கள் இல்லாத இலங்கையைக் கட்டியெழுப்பியுள்ளதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ கூறியுள்ளார்.

கொழும்பு தங்க நகை வர்த்தகர் பிரதிநிதிகள் அண்மையில் பாதுகாப்பு நிதியத்துக்கு இருபது இலட்சம் ரூபா நன்கொடை அளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் கொழும்பில் வர்த்தகர்கள் கடத்தப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றன. அவற்றை புலிகள் அமைப்பும் இன்னும் சிலருமே மேற்கொண்டார்கள் . நாங்கள் முடிந்த மட்டிலும் அவ்வாறான விடயங்களைத் தடுப்பதில் தான் ஈடுபட்டிருந்தோம்.

யாராவது கடத்தப்பட்ட தகவல் எங்களுக்குக் கிடைத்தவுடன் அவரை விடுவிப்பதில் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தோம். அதன் காரணமாக தற்போது முழுமையாக கடத்தல்கள் இல்லா இலங்கையைக் கட்டியெழுப்பியுள்ளோம்.

தமிழ் வர்த்தகர்கள் என்றைக்கும் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளார்கள். அவர்கள் மீது நாங்களும் விசேட கவனம் செலுத்துவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நாடும் நடப்பும்

## கண்டனத்தின் கனதி

செம் மொழியின் காவலனே!
வண்டமிழால் கண்டித்தீர்
கண்டனத்தின் கனதி யென்ன?
ஈழத் தமிழனின் நிலை எடுத்தியம்பி
ஓலை எழுதுவது ஒரு சாட்டு
ஓங்கிப் பேசுவது பெரும் பொழுது போக்கு
பேசிப் பெரும்பயன் கண்டதாலோ
பேசா திருப்பது பெரு மபர்த்தமற
நனைந்த வனைமீண்டும் ஆழ்த்த முனையாதே
அறத்துக்கது மாசல்லோ!
இனத்துக்கது கேடெல்லோ!
அறியாதவன் உரைப்பது முறையன்றோ!

- அறியாதவன்




❖ 0800 - சார்லமேன் புனித ரோமப் பேரரசனாக முடிசூடினான்.
❖ 1000 - ஹங்கேரிப் பேரரசு முதலாம் ஸ்டீபனின் கீழ் கிறிஸ்தவ நாடாக உருவாக்கப்பட்டது.
❖ 1066 - முதலாம் வில்லியம் இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.
❖ 1643 - கிறிஸ்மஸ் தீவு உருவாக்கப்பட்டது.
❖ 1741 - ஆண்டர்ஸ் செல்சியஸ் தனது செல்சியஸ் வெப்பமானியைக் கண்டு பிடித்தார்.
❖ 1758 - ஹேலியின் வால்வெள்ளி ஜொகான் பாலிட்ச் என்னும் ஜெர்மனியரால் அவதானிக்கப்பட்டது.
❖ 1868 - அமெரிக்க உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட அனைத்து கூட்டமைப்புப் படைவீரர்களுக்கும் பொது மன்னிப்பை அமெரிக்க ஜனாதிபதி அண்ட்ரூ ஜோன்சன் அறிவித்தார்.
❖ 1914 - முதலாம் உலகப் போர்: ஜேர்மனிக்கும் பிரித்தானியாவுக்கும் இடையில் கிறிஸ்துமஸ் தின போர்நிறுத்தம் நடைமுறைக்கு வந்தது.
❖ 1926 - ஜப்பானின் டாயீஷோ மன்னன் இறந்தான். அவனின் மகன் ஹிரோ ஹிட்டோ அரசனானான்.
❖ 1932 - சீனாவின் கான்சூ நகரில் 7.6 நிலநடுக்கம் ஏற்பட்டதில் 70 ஆயிரம் பேர் இறந்தனர்.
❖ 1941- இரண்டாம் உலகப் போர்: ஹொங் கொங் மீதான ஜப்பானின் முற்றுகை ஆரம்பமாயிற்று.
❖ 1947 - சீனக் குடியரசின் அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தது.
❖ 1968 - சம்பளம் அதிகம் கோரி போராட்டத்தில் ஈடுபட்ட 42 தலித் மக்கள் தமிழ் நாட்டில் உயிருடன் தீயிட்டுக் கொளுத்தி படுகொலை செய்யப்பட்டனர்.
❖ 1977 - இஸ்ரேல் பிரதமர் பெகின், எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்தை சந்தித்தார்.
❖ 1979 - சோவியத் ஒன்றியம் ஆப்கானிஸ்தானில் தனது படைகளை பெருமளவில் இறக்கியது.
❖ 1989 - ருமேனியாவின் முன்னாள் கம்யூனிசத் தலைவர் நிக்கொலாய் செய் செஸ்குவுக்கும் அவரது மனைவிக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டு சுட்டுக் கொல்லப்பட்டனர்.
❖ 1990 - உலகளாவிய வலைத் திட்டம் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.
❖ 1991 - சோவியத் தலைவர் பதவியில் இருந்து மிக்கைல் கொர்பச்சோவ் விலகினார். அடுத்த நாள் சோவியத் ஒன்றியம் கலைக்கப்பட்டது.
❖ 1991 - உக்ரேன் சோவியத் ஒன்றியத்தில் இருந்து விலகியது.
❖ 2003 - மார்ஸ் எக்ஸ்பிரஸ் விண்கலத்தில் இருந்து டிசம்பர் 19 இல் ஏவப்பட்ட பீகில் 2 விண்கலம் தரையில் இறங்குவதற்கு முன்னர் காணாமல் போனது.
❖ 2004 - காசினி விண்கப்பலில் இருந்து சனிக் கோளின் சந்திரனான டைட்டானில் இறக்குவதற்காக ஹியுஜென்ஸ் என்ற சேய்க்கலம் விடுவிக்கப்பட்டது. இது ஜனவரி 14,2005 இல் டைட்டானில் இறங்கியது.

### பிறப்புகள்

❖ 1642 - ஐசக் நியூட்டன், ஆங்கில இயற்பியலாளர் மற்றும் கணிதவியலாளர் (இ. 1727)
❖ 1876 - முகமது அலிஜின்னா, பாகிஸ்தானைத் தோற்றுவித்தவர் (இ. 1948)
❖ 1899 - ஹம்பிறி போகார்ட்,அமெரிக்க நடிகர் (இ. 1957)
❖ 1906 - ஏர்ணஸ்ட் ருஸ்கா ஜேர்மானிய இயற்பியலாளர், நோபல் விருதாளர் (இ. 1988)
❖ 1918 - அன்வர் சதாத், எகிப்திய தலைவர், நோபல் விருதாளர் (இ. 1981)
❖ 1919 - நௌஷாத் அலி, இந்திய இசைக் கலைஞர் (இ. 2006)
❖ 1924 - அடல் பிஹாரி வாஜ்பாய், முன்னாள் இந்தியப பிரதமர்.
❖ 1927 - ராம் நாராயண், ஹிந்துஸ்தானி இசைக்கலைஞர்.
❖ 1949 - நவாஸ் ஷெரீப், பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர்.
❖ 1974 - நக்மா, இந்திய நடிகை.

### இறப்புகள்

❖ 1931 - பா.வே.மாணிக்க நாயக்கர், அறிவியல் தமிழ் வளர்த்த தமிழிஞர் (பி. 1871)
❖ 1977 - சார்லி சாப்ளின், ஹொலிவுட் நடிகர் (பி. 1889).
❖ 1994 - ஜெயில் சிங், முன்னாள் இந்திய ஜனாதிபதி. (பி. 1916)
❖ 2006 - தமிழோவியன், இலங்கையின் மலையகத்தின் மூத்த இலக்கியவாதியும் கவிஞரும்.
❖ 2006 - ஜேம்ஸ் ப்ரௌன், இசையறிஞர் (பி. 1933)
❖ 1796 - வேலு நாச்சியார், ஆங்கிலேயருக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிய முதல் பெண் போராளி. (பி. 1730)

**இன்று இயேசு கிறிஸ்து பிறந்த தினம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நத்தார் சிறப்பு

## யாழ்.ஆயரின் நத்தார் செய்தி



மனிதனை விடுவிக்க, வாழ்வில் ஒளியேற்றிப் புதுப்பிக்க வரலாற்றில் ஆண்டவர் இயேசு பாலகனாகப் பிறந்ததை மீண்டுமொருமுறை நத்தார் தினமாக கொண்டாடுகிறோம். கொடிய போரின் சத்தங்கள் ஓய்ந்து அதனால் பாதிக்கப்பட்ட மக்கள் மீண்டும் தமது இல்லிடங்களுக்கும், கிராமங்களுக்கும் போய்க்கொண்டிருக்கும் இவ்வேளை, இயேசு பாலகனின் பிறப்பு, இவர்களின் துன்பியல் வாழ்வை எம் கண்முன் நிறுத்தி சிந்திக்க வைக்கிறது. அவரின் பிறப்பும் வறுமை, எளிமை , துயரம் மத்தியில்தான் நிகழ்ந்தது. உலகில் ஒரு சாரார் எல்லா சுகபோகங்களையும் அனுபவிக்க, பெரும்பாலானோர் வறுமையிலும், வசதியற்ற நிலையிலும் தான் காலத்தைச் செலவிடுகின்றனர். நத்தார் திருவிழா எமது சூழலைச் சிந்திக்க வைத்து, அன்பு, பகிர்தல், இரக்கம் போன்ற விழுமியங்களை உறுதியுடன் வாழ அழைக்கிறது. நத்தார் பெருவிழா-குடும்ப விழா-குழந்தைகள் விழா நல்மனம் கொண்ட அனைவரின் விழா.

எனவே ஆண்டவர் இயேசுவின் ஆசிகளை மக்கள் அனைவருக்கும் வழங்கி, என் இனிய நத்தார் புத்தாண்டு வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்கிறேன்.

**பேரருட்திரு. இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை,**
**யாழ். ஆயர்**

## யேசு பாலனை எம் உள்ளங்களில் ஏற்போம்!

''கன்னி கருத்தாங்கி ஒரு மகனைப் பெற்றெடுப்பாள் அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார்'' (எசா 7.14)

மனிதனிடம் காணப்படும் பலகீனம் எது என்றால் அது அவனுடைய இயலாமையே! மனிதன் என்னதான் தன்னால் அனைத்தும் முடியும் என்று இறுமாப்புக் கொண்டாலும் இறைவன் ''நாமே உன் கடவுள் என்பதனை எமக்கு எடுத்துக் கூறிநிற்பதே திருவருகைக் காலத்தில் நாம் சிந்திக்கவேண்டிய அதிமுக்கிய கருத்தாகும். மனிதரை விண்ணுலகிற்கு உரிமையாளர் ஆக்குவது அவர்களது பணம், பட்டம், பதவி, சமுதாய அந்தஸ்து, அரசியல் பலம் என்பனவல்ல. மாறாக கடவுள் மீது கொண்டிருக்கும் அசைக்கமுடியாத நம்பிக்கையும் எதுவரினும் மாறாத விசுவாசமும் அவர்மீதுள்ள பயமும் அயலவர் மட்டில் கொள்ளும் இரக்கமும் அன்புமேயாகும்.'' நாம் கொண்டாடும் கிறிஸ்து பிறப்பு விழா எமக்கு கூறுவது என்னவென்றால் ஒரு உண்மையான கத்தோலிக்க குடும்பத்திலும் சரி சாதாரண குடும்பத்திலும் சரி இருக்கவேண்டிய ''புரிந்துகொள்ளும் மனநிலை, ஏற்றுக் கொள்ளும் மனநிலை, ஒத்துப்போகும் வாழ்க்கை முறையினை கேட்டு நிற்பதுதான் இந்தக் கிறிஸ்து பிறப்புவிழா'' ஏனென்றால் இறுமாப்புக் கொள்பவர் வாழ்ந்ததாக சரித்திரமில்லை. தாழ்மையான குணம் தான் மனிதனை மாந்தருள் உயர்த்தும். நல்ல மனிதனை அளக்கும் அளவுகோலும் அதுதான். ''நீ பெரியவனாய் இருக்கும் அளவிற்கு பணிந்துநட'' (சீஞா3:18) என்றும் ''கடவுள் தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார், பசித்தோரை நலன்களால் நிரப்புகிறார், செல்வரை வெறுங்கையராய் அனுப்பிவிடுகின்றார்''(லூக்1:50-53) என்று விவிலியம் கூறுவதனையும் நாம் காணலாம்.

விண்ணகம் விட்டு மண்ணகம் வந்த மாபரனின் மகிமையின் விழாவில் மனங்கள் எல்லாம் அமைதியும் அன்பும் இரக்கமும் பெருக வாழ்த்துகின்றோம்.

**அருட்தந்தையர்கள், அருட்சகோதரர்கள், மாணவர்கள்,**
**அருள்ஆச்சிரமம், யாழ்ப்பாணம்.**

## பேராயர் ஜெபநேசனின் நத்தார் செய்தி



தெய்வீக பாலனின் வருகையைக் கொண்டாட தயாராகிக் கொண்டிருக்கின்றோம். இன்று நமது பிரதேசத்தில் மின்னல் வேகத்தில் மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற வேளையில் எப்படிப்பணத்தை விரைவில் பெருக்கலாம், உயர் பதவிகளை எப்படிப் பெற்றுக் கொள்ளலாம் என்பதே பலரின் சிந்தனையாகவுள்ளது.

அவசரமும் போட்டிகளும் நிறைந்த காலகட்டத்திலே இயேசுபிரான் எப்படி வாழ்ந்தார் என்பதனை சிந்தித்துப்பார்ப்பது பயனுள்ளதாகும். அவருடைய வாழ்க்கை முறையையும் சாதனைகளையும் ஓர் ஆங்கிலக்கவிஞர் பின்வருமாறு எழுதியுள்ளார்.

''அவர் ஒரு சிறிய ஊரிலே பிறந்தார். தாயார் ஓர் ஏழை கிராமத்துப்பெண். முப்பது வயது வரை தச்சுத் தொழிற்சாலையொன்றில் வேலைசெய்தார். அதன்பின் மூன்று வருடங்கள் அலைந்து திரியும் பிரசங்கியாக வாழ்ந்தார். மக்கள் அபிப்பிராயம் அவருக்கு மாறாக கிளர்ந்தெழுந்த பொழுது அவருடைய நண்பர்கள் அவரை விட்டு ஓடிவிட்டனர்.

அவருடைய எதிரிகளிடம் கையளிக்கப்பட்டார். விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு குற்றவாளியெனத் தீர்ப்பிடப்பட்டார். சிலுவையில் அறையப்பட்டு இரண்டு கள்வர் இடையில் தொங்கவிடப்பட்டார். அவர்இறந்தபொழுது யாரோ ஒருவனுடைய கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார்.

அவர் ஒரு புத்தகத்தைதானும் எழுதவில்லை.எந்தவொரு பதவியையும் வகிக்கவில்லை. சொந்த வீடு அவருக்கில்லை. ஒரு கல்லூரியில் காலடி எடுத்து வைக்கவுமில்லை. தான் பிறந்த ஊரிலிருந்து இருநூறு மைல்களுக்குமேல் பிரயாணம் செய்ததுமில்லை. பெருந்தகை என்று கருதப்படுபவர் செய்யும் எந்தவொரு வேலையையும் அவர் செய்து முடிக்கவில்லை.

ஆனால் உலகமனைத்திலும் அணிவகுத்த இராணுவங்கள், ஆட்சிபுரிந்த அரசுகள், பாராண்ட மன்னர்கள் இந்தத் தனிமனிதனின் வாழ்க்கை பூவுல கில் ஏற்படுத்திய தாக்கத்திற்கு நிகராகா.''

இன்று நமது நாட்டிற்கு தேவையானது அடக்கம், அன்புடமை, ஆரவாரமின்மையாகும். இயேசுபிரானின் வருகையைக் கொண்டாடும் பொழுது இவற்றை மனத்தில் இருத்துவோமாக.

**கலாநிதி எஸ்.ஜெபநேசன்,**
**முன்னாள் பேராயர், தென்னிந்திய திருச்சபை.**

## யார் தெய்வீகப் பிறவி?

*உன் எதிரியும், துரோகியும்*
*துன்பப்படும் பொழுது*
*அந்த துன்பம் உன்னுடையதாய்*
*உனக்குள்ளிருந்து வேதனையைக் கிளப்புகிறதோ*
*அப்பொழுதுதான் நீ*
*தெய்வீகப்பிறவி*
*அன்று! யேசுநாதர்*
*தன்னைக் காட்டிக் கொடுத்தவனையும்*
*தன் உடலை சிலுவையில் அறைந்தவர்களையும்*
*பிதாவே!*
*தயவுசெய்து இவர்களை மன்னியும்*
*இவர்கள் செய்கின்ற பாவங்கள்*
*இன்னதென்று அறியாமலிருக்கிறார்களே என்றார்*



**சுவாமி ராஜேந்திரன்**
**செல்வச்சந்நிதி கோவிலடி, தொண்டைமானாறு**



## எல்லா மக்களுக்கும் பெரு

இன்றைய எமது சூழலில் கண்ண
களுடனும் அங்கலாய்புக்களுடனும் வா
வழியின்றி ஏங்கித் தவிக்கும் மக்கள், தா
இழந்து, தந்தையை இழந்து, மனைவி
இழந்து, பிள்ளைகளை இழந்து வாழு
மக்கள், அகதி முகாம்களுக்குள்ளே சி
யிடப்பட்டுள்ள மக்கள். தன் மகன் வ
காய் வழிமேல் விழிவைத்து காத்திருக்கு
தாய்மார்கள் என்ற ஒரு சூழல்.

நுகர்வுக் கலாசாரத்துக்குள்ளே தங்க
வாழ்வை புதைத்து வாழ வழி தெரியா
நிற்கும் மக்கள், அமைதிச் சூழல் என்ற மா
வலையினுள் சிக்கி தமது உரிமைக
இழக்கும் மக்கள், சமாதானம் என்ற பே
வையிலே மக்களின் வளங்களை சுரண்
வாழும் மக்கள் கிறிஸ்து பிறப்பு எப்படி பெரு
மகிழ்ச்சியூட்டும் செய்தியாக எமக்கு அ
யப் போகின்றது?...

ஆம்! இயேசு கிறிஸ்துவின் பிறப்பு எல்
மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் ந
செய்தி தான். அது சாதி, மதம், இனம், நா
அனைத்துக்கும் அப்பாற்பட்டது. அமை
மகிழ்ச்சிக்கான ஒரே வழி இயேசு ஒரு
மட்டும் தான். கிறிஸ்மஸ் அளிக்கும் செய்
யாராவது வேறு ஏதாவது பொய்யான ச
தோசத்தில், அமைதியில் வாழ்ந்து கொ
டிருந்தால் அவர்களுக்கு உண்மையா
நிலையான, சந்தோசமான அமைதிக்கு

Peninsula Super Mall
Super Market Services
PSM
No: 127, Kandy Road,
Kachcheri,
Jaffna.
021 222 1848
psmjaffna@gmail.com





கஜமுகன்
ஹாட்வெயர்
147, 149, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:021 222 2833




அ
தெ
தொ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்–25.12.2010





## அவர் தமக்குரியவர்களிடம் வந்தார் அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்று கொண்டனர்

விஞ்ஞானத்தின் வியப்புக்கள், இயற்கையின் எழுச்சிகள், காலத்தின் சுழற்சிகள், மனிதனின் வளர்ச்சிகள் மற்றும் மனித உள்ளங்களின் புரட்சிகள், அறிவியலின் ஆக்கப் பணிகள், இன்று உலகளாவிய ரீதியில் புகட்டும் பாடங்களும், படைக்கும் சாதனைகளும் அளப் பரியனவாகி வருவதனை நாம் அன்றாடம் கண்டனுபவிக் கின்றோம்.

இந்த வேளையில் "சமாதானம் செய்வோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் எனப்படுவர்" என்று கூறி எம் மத்தியில் வந்து பிறக்கின்ற கிறிஸ்துதன் பிறப்போடு கொண்டு வந்த சமாதானம் கேள்விக் குறியாகின்றது.

இந்த துர்ப்பாக்கிய நிலையை எங்ஙனம் நாம் எழுச்சி உடைய தாக்க முடியும். இதனை நாம் நன்றாக ஆழ்ந்து நோக்கினால், "ஒடுக்கப்பட்டோர் மீண்டும் ஆண்டவரில் மகிழ்ச்சி பெறுவர் மானிடரில் வறியவர் இஸ்ரயேலின் தூயவரில் அகமகிழ்வர்" (எசாயா: 29:19) என்ற இறை வார்த்தை எமது நம்பிக்கையை திடப்படுத்திக் கொண்டிருக்கின்றது.

**இவர்கள் இருவகையினர் மத்தியில் கிறிஸ்துவின் இடம் பெயர்வு கூறுவது என்ன? தேடுவோம்?**

***கிறிஸ்துவின் இடம் பெயர்வு:***

"வாக்கு மனிதர் ஆனார்; நம்மிடையே குடிகொண்டார்" (யோவான் 1:14) விண்ணிலிருந்து மண்ணுக்கு இடம் பெயர்ந்தார். தமக்குரியவர்களிடம் வந்தார். அவர் இடம் பெயர்வு கொண்டு வந்ததுதான் என்ன?

ஏழைகள் மனதிற்கு மகிழ்ச்சி அடிமைப்பட்டோருக்கு விடுதலை. ஒடுக்கப்பட்டோருக்கு உரிமை வாழ்வு. சுமை சுமப்போருக்கு இளைப்பாற்றி தாகமாய் இருப் போருக்கு குடிபானம். நோயிலிருப் போருக்கு குணமாக்கல். பட்டினியிலிருப்பவருக்கு உணவு . பிரச்சினையிலிருப்போருக்கு தீர்வு என்னும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி கொண்டுவந்தார். வந்தவர் நின்றுவிடவில்லை. ஆயனில்லா ஆடுகளை அரவணைத்தார். பாவிகள் தேடிச் சென்றார். சிறையிலிருப்போரை காண நாடிச் சென்றார். ஒடுக்கப்பட்டோருக்கும் உரிமை வாழ்வு என முழங்கினார். சமூகச் சாக்கடையிலிருப் போருக்கு அருள்தரும் ஆண்டினை உரைத்தார். மானிடத்தை அழிக்க பயன்படுத்திய போர் வாள்களை மண்ணை பண்படுத்தும் கலப்பையாக்கினார். மக்கள் இனங்கள் இடையே போர்ப்பயிற்சியை அல்ல அன்பியப் பயிற்சியை நடத்தினார்.

இதனால் பறந்தது தனி உடமை, பிறந்தது பொது உடமை, மலர்ந்தது மகிழ்ச்சியான வாழ்வு, அழிந்தது ஆட்சியாளர் ஆதிக்கம், ஒழிந்தது ஆணவத்தின் ஆட்சி, ஒளிர்ந்தது ஒளியின் ஆட்சி, சுடர் ஆனார் பிறந்த இயேசு பாலன். கிடைத்தது வாழ்வு நிறைவாக, மகிழ்ந்தது மனங்கள் வேறுபாடு இன்றி, கடவுள் தன்மையில் விளங்கிய அவர் மனிதனை மீட்க மனிதனாக மாறினார். அவர் செல்வராக இருந்தும், நாம் செல்வராகும் படி அவர் நமக்காக ஏழையானார். இவை கிறிஸ்து எம்மை நோக்கி இடம்பெயர்ந்ததினால் நிகழ்ந்தவை என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

"கடவுளே எங்களை முன்னைய நன்னிலைக்குக் கொணர்ந்தருளும்! எம்மை மீட்குமாறு உமது முக ஒளியைக் காட்டியருளும்!" (தி.பா: 80:3) என்ற திருப் பாடல் வரிகள் காட்டும் கடவுள் மீட்பை உணர்ந்து, பண்பற்ற இதயங்கள் குணம்பெற, பண்புற்ற இதயங்களாக நாம் மாறவேண்டும் என்று கிறிஸ்மஸ் விடுக்கும் அழைப்பை புரட்டிப்பார்த்தது மனிதம்.

**நம்மை நோக்கி வந்த பாலனின் விருப்பம்.**

அப்போதுதான் மனிதம் உணர்ந்தது இறைவனில் இருந்து தாம் தொலைவில் நிற்பதை "ஆண்டவர்(..) உடைந்த உள்ளத்தோரைக் குணப்படுத்துகின்றார்; அவர்களின் காயங்களைக் கட்டுகின்றார்." (தி.பா:147:3) என்ற இறைவார்த்தையே இந்த நொந்தவர்களுக்கு விடியலை அளிப்பதாக இருந்தது. திரும்பிப் பார்த்தது தினை அளவும் பிறழாத தீர்க்காதரிசனத்தை:- இருளில் நடந்த மக்கள் பேர் ஒளியைக் கண்டனர்.

அகந்தை பிடித்தோரை அல்ல அறியாமையில் அமிழ்ந்திருந்த ஆட்டு இடையர்கள் அருள் முகம் கண்டனர். மாபெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி மண்ணுலகெங்கும் பரவியது. மாறத் துடித்த மனிதம் கேட்டது பாலனிடம் அவர் விருப்பத்தை.

நம்மை நோக்கி வந்த பாலகன் உரைக்கின்றார் - வார்த்தை போதனை விடுத்து வாழ்க்கை போதனைகளை சாதனைகளாக சரித்திரமாக்குங்கள். சாவின் சக்திகளுக்கு சாவுமணிகள் அடியுங்கள். ஆடம்பரத்தை நாடாதே ஆடையற்றோரை அண்டி செல், வீண் விரயம் செய்யாதே வீடற்றோரை தேடிச் செல். அன்பு என்றால் என்ன என்று அறியாதவர்களை அரவணைக்க ஓடிச் செல். பணத்தை கூட்டிவைத்து புகழைப் பெருக்கி வைத்து பயனில்லை. இறைவன் பாதையில் நடக்காவிட்டால், மனம் திரும்ப வேண்டும். மனிதம் மலர வேண்டும். மனித நேயமும் மாட்சிபெற வேண்டும். உதவும் உயர் குணம் உருப்பெறவேண்டும். இனக் குரோதம் இல்லாத இலங்கையர் உருவாகவேண்டும். துவேச மில்லாத தூயவர்கள் வளரவேண்டும். ஒவ்வொரு மனிதனும் இந்த கிறிஸ்து பிறப்பு விழாவிலிருந்து பாலன் இயேசு உறையும் நடமாடும் நற்கருணை பேழையாக வேண்டும். இவை தான் இன்று நம்மை நோக்கி பிறந்த பாலன் இயேசு கேட்கும் மாற்றம். எனவே எம்மை விட்டு அகற்றுவோம் அத்தனை அசிங்கங்களையும். எம் இதயங்களை எல்லாம் ஆவியானவரின் ஆலயமாக்குவோம். இறை மாண்பையும் அன்பையும் புதிய பார்வையையும் நம் செயற்பாடுகளில், நல்லமைதியைத் தேடி நம்மில் உருவாக்குவோம்.

அப்போது உதயமாகும் உன்னதரின் ஆட்சி. பிறப்பார் இயேசுபாலன் நம் இதயக் குகைகளில் உலகில் ஒளியான இயேசு நம் வாழ்வில் சுடர் விட்டு ஒளிர்வார். எம் ஆன்மாவில் என்றும் அழியாத முத்திரை பதிப்போம். கிறிஸ்மஸ் பெருவிழா நாள்தோறும் நம்மில் அர்த்தம் பெறும். கிறிஸ்து கொண்டு வந்த சமாதானம் நம்மிடையே தங்கும். அன்பு கலாசாரத்தில் ஒரு அகிலம் உருவாகும். புதிய பார்வையுடன் புலரும் ஒரு புத்தாண்டு. மகிழும் இதயமெல்லாம் இறைவன் வரவுகண்டு உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக என்ற நற்செய்தி நம் உள்ளமெங்கும் ஒலிக்கட்டும். அவர் தமக்குரியவர்களிடம் வந்தார். அவருக்கு உரியவர்கள் அவரை ஏற்று கொண்டார் என்னும் புதிய வரிகளை எழுதுவோம் இந்த கிறிஸ்துபிறப்பு விழாவில்

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.**

### இறைமகன் போதனை வேதனை தீர்க்கும்

மாதமும் காரிருள் மண்டியே கிடந்தது
மார்கழி குளிரினால் மரம்கொடி நனைந்தது
கூதலால் மக்களின் மனங்களும் ஒடுங்கின
பாலகன் இயேசு குடில்தனில் பிறந்தார்
வேதமும் நிலைத்திட வானவர் தூதனாய்
வந்தவர் வாழ்வினை எமக்கென ஈந்தார்
போதனை செய்தவர் வேதனை தாங்கினார்
புதுமைகள் இன்றும் பேசிட வைத்தார்

**அல்வையூர் கே.ஆர்.திருத்துவராஜா**

### பாலகன் யேசுவே

மார்கழி மாதம்
கடும் குளிர் நேரம்
மாட்டுத் தொழுவத்தில்
அன்னை மரியாளின் மடிதனில்
இறைமகன் யேசு பாலன்
அவதரித்த நன் நாளை
நாமெல்லாம் போற்றிடுவோம்...!

### ...ரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி

திரும்பிவர கடவுள் விடுக்கும் அழைப்புதான் கிறிஸ்மஸ். மாபெரும் மகிழ்ச்சியும் மாறாத அமைதியும் கிடைத்திட ஒரே வழி ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மனிதாவதாரத்தை நம்புவதும் ஏற்றுக் கொள்வதும் தான். கண்கள் தசையை காண்கின்றன. ஆனால் அந்த தசையில் இருக்கும் கடவுளின் வார்த்தையை காண அகக்கண்கள் மறுத்து விடுகின்றன.

இடையர்கள் இறைவார்த்தையை கேட்டபோது அந்த இறைவார்த்தையை காணச் சென்றார்கள். "வாருங்கள் நாம் பெத்தலகேமுக்குப் போய் ஆண்டவர் நமக்கு அறிவித்திருக்கிற இந்த நற்செய்தியைப் பார்ப்போம். (லூக் 2:15) வார்த்தை மனுவுருவாயிற்று மனிதனாகப் பிறந்தது. அதை நாம் தேடி கண்டடைய வேண்டும். அவ்வாறு தேடிச் செல்லும் போது இயற்கை கூட துணையாக நிற்கும்."

"காரிருளில் நடந்து வந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள் சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட்டில் குடியிருப்போர் மேல் சுடர் ஒளி உதித்துள்ளது (எசா 9:2) இருளை நீக்கம் செய்வது தான் இயேசுவின் மனித அவதாரம். இதுவே பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தி."

**சூ.எட்வின் நரேஷ்**
**புனித மருத்தீனார் குருமடம்**

...ன்னா
...தாழிலகம்
இணுவில்
...பே: 021 222 3565

வெங்கடேஸ்வரா
ரான்ஸ்போட் சேவிஸ்
125, 127, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
127, பழைய சோனகத் தெரு, கொழும்பு-12
தொ.பே:021 222 8306

ASP ENTERPRISES
Dealers in Electric Bicycles, Induction Cookers, Japan Reconditioned Bicycles & Spares
Catholic Press Complex, 360/9, Main Street, Jaffna. (Near the Bastian Junction)
Telephone: 021 300 1585
Mobile: 0776079352
E-Mail:aspjaffna@gmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**13-IV**

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...

### வாழைக்கிழங்கு நீள்மூஞ்சி வண்டு
(Banana rhizome weevil)

இந் நீள்மூஞ்சி வண்டு கடினமான புறத் தோலையுடையதும் செம்மண்ணிறமானது மாகும். வாழைக்கிழங்கிலே அல்லது போலித் தண்டிலே (Pseudostem) சிறு துளைகளை ஏற்படுத்தி அதனுள்ளே முட்டைகளை இடும். பொதுவாக முட்டைகள் 5-8 நாட்களில் பொரித்து விடும். முட்டை பொரித்தவுடன் வெளிவரும் புழுவானது கால்களற்றதாக மஞ்சள் நிறத்தினதாக இருக்கும். தலை செந்நிறமுடையதாகும். இந்தப்புழு கிழங்கினை துளைத்து உட்புகுந்து விடும். உட்சென்ற புழுவிற்கு உணவு அருகிலேயே இருப்பதனால் வயிறார உண்டு பெருத்துவிடும். இவை இவ்வளவும் கிழங்குப் பகுதியில் நிகழ்வதால் நீள்மூஞ்சி வண்டினது புழுவிலாலான சேதத்தை எம்மால் கண்டுகொள்ளமுடியாது. ஏறக்குறைய 25 நாட்களில் புழு முதிர்ச்சியடைந்து கூட்டுப்புழுவாக கிழங்கினுள் புழு ஏற்படுத்திய சுரங்கப் பாதை (Tunnel) யிலேயே உருமாறி விடும். புழுவைப்போல நிறைவுடலி நீள்மூஞ்சி வண்டும் கிழங்கின் உட்பகுதியை உண்டு சுரங்கப் பாதையை அமைத்து சிறப்பாக வாழும். நிறைவுடலி வண்டு ஏறக்குறைய ஒருவருட காலம் உயிர்வாழும் என்றால் பாருங்களேன்!

ஒரு வருட கால வாழ்க்கைக் காலத்தில் நிறைவுடலியான நீள்மூஞ்சி வண்டு தன்னினம் பெருக்கி, வாழைக்கிழங்கின் கணிசமான பகுதியை குறிப்பாக குருத்து உருவாகும் பகுதியை தன் உறவுகளுடன் உண்டு சேதப்படுத்துவதால் பாதிக்கப்பட்ட கிழங்குப் பகுதியில் அழுகல் ஏற்பட்டு அதன் காரணமாக வாழை இலை வாடத் தொடங்கும். இந்தளவிலேயே இந் நீள்மூஞ்சி வண்டினது தாக்கம் எமது கண்களுக்கு புலப்படும் . அப்போது வாழையின் கிழங்குப் பகுதி சீர்செய்ய முடியாத அளவிற்கு நீள்மூஞ்சி வண்டினது நிறைவுடலி மற்றும் புழு பருவங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும். குலை போடும் தருவாயில் இருக்கும் வாழையாயின் குலையின் அளவு சிறுத்தும் பழங்கள் சிறியதாகவும் இருக்கும்.


வாழைக்குலைக்கு சேரவேண்டிய சத்துக்கள் கிழங்கிலிருந்து மேல் நோக்கி செல்வதில் நீள்மூஞ்சி வண்டுகளின் சேதம் தடையாக இருப்பதுவே இதற்குக் காரணம் எனப் புரிகின்றதல்லவா. அவ்வாறாயின் வாழைக்குலை சிறுத்து இருப்பதற்கும் காய்கள் அடர்த்தியில்லாது இருப்பதற்கும் நீள்மூஞ்சி வண்டுகளும் ஒரு காரணம் என விளங்குகின்றதல்லவா.

### வாழை போலித்தண்டு நீள்மூஞ்சி வண்டு

இவ்வண்டும் உருவத்தில் கிழங்கு நீள்மூஞ்சி வண்டை ஒத்தாற்போல் இருக்கும். இவ்விரு வண்டுகளிலுள்ள வேறுபாட்டை பூச்சியியலாளர்கள் இலகுவில் இனம் காண முடிகின்ற போதிலும் விவசாய பெருமக்களால் இனம்காண சிரமமாகவே இருக்கும் . நீள்மூஞ்சி வண்டு என இனங்காண முடிந்தாலே போதுமானது. இதனது வாழ்க்கை வட்டமும் இளம் பருவங்களும் முன்னையதைப் போலவே இருக்கும். ஆனால் இங்கே சேதம் போலித் தண்டிலே என்பதை உறுதி செய்ய முடிகின்றதல்லவா. வாழை இலையுடன் வாழைமட்டையை பிடித்திழுத்தால் இந் நீள்மூஞ்சி வண்டுகளையும் அவற்றினாலேற்படுத்தப்பட்ட துளைகளையும் அவதானிக்கலாம்.

### நீள்மூஞ்சி வண்டுகளை கட்டுப்படுத்த

வாழைத் தோட்டத்தில் சருகுகளைக் கத்தரித்து சுத்தமாக வைத்திருப்பது அவசியம். சுத்தம் சுகம் தரும் என்பது இங்கும் பொருந்தும். குலை வெட்டியவுடன் வெட்டிச் சரிக்கப்படும் வாழைத்தண்டை (அது போலித்தண்டு அல்லவா!) வாழைத் தோட்டத்தில் அப்படியே விட்டுவிட வேண்டாம். அரைகுறையாக விடப்படும் வாழைத்தண்டு அடியை இந் நீள் முஞ்சி வண்டுகள் தங்கியிருந்து தன் இனம் பெருக்க வாய்ப்பாக்கிக் கொள்ளும். வாழைத்தண்டில் குறுக்காக வெட்டிய இரு மெல்லிய துண்டுகளுக்கிடையில் காபோபியூரான் குருணலை இட்டு sandwitch ஆக (இரு பாண் துண்டுகளுக்கிடையிலே கறியை வைத்து தயாரிப்பது போல) ஆங்காங்கே வாழைத்தோட்டத்தில் வைத்து நீள்மூஞ்சி வண்டுகளை கவர்ந்திழுத்து இவ்வுணவு பொறிமூலம் கட்டுப் படுத்தலாம். வாழைகளை நெருக்கமாக நடுவதை தவிர்ப்பதுடன் தேவையற்ற வாழைக்குட்டிகளையும் அகற்றிவிடுதல் நல்லது. (தொடரும்)



சான்ட்விச் உணவுப்பொறி

# கொடுத்த கடனை திரும்ப கேட்டவருக்கு கொதிநீரை ஊற்றிய கொடூரம்

## லுணுகலையில் சம்பவம்

(கொழும்பு)

கொடுத்த கடனை திரும்பக் கேட்டவரின் மீது கொதிநீரை ஊற்றிய கொடூர சம்பவமொன்று லுணுகலை , ஹோப்டன் தோட்டத்தில் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர் லுணுகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். குறித்த தோட்டத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளி ஒருவர் மற்றொரு நபரிடமிருந்து ஒரு தொகைப் பணத்தைக் கடனுதவியாகப் பெற்றுள்ளார்.

பலமாதங்கள் கடந்த நிலையில் அந்தக் கடனை திருப்பிச் செலுத்தாமையினால் பணத்தைக் கொடுத்த நபர் மேற்படி தொழிலாளியின் வீட்டுக்குச் சென்று கடனை திரும்பத் தருமாறு கோரியுள்ளார்.

இதன்போது இருவருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டதையடுத்து கோபமடைந்துள்ள தொழிலாளி - கொதிநீரை எடுத்து வந்து கடன் வழங்கியவர் மீது ஊற்றியுள்ளார். இதனால் காயங்களுக்குள்ளான அவர் அயலவர்களின் உதவியுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவத்தை அடுத்து அங்கு விரைந்த பொலிஸார் சந்தேக நபரான தொழிலாளிகளைக் கைது செய்ததுடன் சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகளையும்மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)




"சுகவாழ்வுக்கான பயணம்" நிறுவனத்தினரால் அண்மையில் கோண்டாவில் பொதுநூலகத்தில் வைத்து அவ்வூர் மக்களுக்கு இலவச பயன்தரு மரக்கன்று வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் நிறுவன நிர்வாக உத்தியோகத்தர் ரி.கஜீதா பயனாளி ஒருவருக்கு மரக்கன்று வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# இவ்வாண்டில் 28 இலட்சம் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் யாழ்ப்பாணம் வருகை

(கொழும்பு)

இவ்வாண்டில் இதுவரை தென்னிலங்கையைச்சேர்ந்த 28 இலட்சம் பேர் யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலாப் பயணிகளாக வருகை தந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஏப்ரல், ஆகஸ்ட் மற்றும் டிசம்பர் மாதங்களில் பாடசாலை விடுமுறைக் காலம் என்பதனால் அதிகளவான மக்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

போர் இடம்பெற்ற பிரதேசங்களை பார்வையிடுவதற்காகவும், மத வழிபாடுகளை மேற்கொள்வதற்காகவும் சுற்றுலா நோக்கிலேயே அதிகளவானவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதாகக் குறிப்பிடப்படுகிறது.

(ஸ்ரீ-2)

# தேசிய சுதந்திர முன்னணியிலிருந்து அசல ஜாகொட எம்.பி. வெளியேற்றம்

அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியிலிருந்து அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அசல ஜாகொட வெளியேற்றப்பட்டுள்ள நிலையில் கட்சிக்குள் விரிசல்கள் அதிகரித்து வருவதாக அரசியல் வட்டாரங்களால் தெரிவிக்கப்படுகிறது.

2008 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஜே.வி.பியிலிருந்து பிரிந்து சென்று தேசிய சுதந்திர முன்னணியை (ஜே.என்.எவ்) ஆரம்பித்த எம்.பிகளில் அசல ஜாகொடவும் ஒருவர். கடந்த பொதுத் தேர்தலின் பின் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக அவர் நியமிக்கப்பட்டார்.

அசல ஜாகொட வெளியேற்றப்பட்டதை தேசிய சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் பிரியன்ஜித் விதாரண உத்தியோக பூர்வமாக உறுதிப்படுத்த மறுத்துவிட்டார். எனினும் கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக செயற்படும் எவருக்கும் எதிராக கட்சி நடவடிக்கை எடுக்கத் தயங்காது என அவர் கூறினார்.

ஓர் அணியாக இணைந்து தேசிய இலக்குகளை அடைவதற்கே நாம் ஜே.வி.பியிலிருந்து பிரிந்து தேசிய சுதந்திர முன்னணியை ஆதரித்தோம். தமது சொந்த நலன்களுக்காக கட்சியின் கொள்கைகளுடன் சமரசம் செய்து கொள்ள ஒருவர் விரும்பலாம். அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள நாம் தயங்கப் போவதில்லை என பிரியன்ஜித் விதாரண கூறினார்.

அதேவேளை, தனக்கும் கட்சித்தலைமைத்துவத்துடன் பிரச்சினைகள் இருப்பதாக விதாரண ஒப்புக்கொண்டார்.

எனக்கு கட்சி தலைமைத்துவத்துடன் சில பிரச்சினைகள் இருக்கின்றன. அதுபற்றி இப்போது பேசத் தயாரில்லை. பொருத்தமான வேளையில் நான் அதைச் செய்வேன் என அவர் தெரிவித்தார். (ச-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தினவிழா அண்மையில் யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடமராட்சி வடக்குப் பிரதேச செயலாளர் இரா.வரதீஸ்வரன், அவரது பாரியார் திருமதி உமா வரதீஸ்வரன், பருத்தித்துறை மெதடிஸ்த திருச்சபை சேகர முகாமைக்குரு ந.அருள்நாதன், வடமராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், விசேட கல்வி ஆலோசகர் தெ.புவனேந்திரன், மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் திருமதி செ.சுந்தரேசன், முன்னாள் ஹாட்லிக் கல்லூரி பிரதி அதிபர் ந.குணசீலன் ஆகியோர் அழைத்து வரப்படுவதையும் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் அருகில் விசேட கல்வி ஆலோசகர் தெ.புவனேந்திரன் நிற்பதையும் பிரதம விருந்தினர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அல்வாய் செய்தியாளர்)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய பாடசாலை அதிபர் களுக்கான அவசர கலந்துரையாடல் எதிர் வரும் 29ஆம்திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக மண்டபத்தில் நடைபெறும் என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார்.

(ஸ்ரீ-3-29)

# சோமாலிய கடற்கொள்ளையர்களால் பெருந்துன்பங்களை அனுபவித்தோம்

## விடுவிக்கப்பட்ட இலங்கை மாலுமி தெரிவிப்பு

(கொழும்பு)

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டு தற்போது விடுவிக்கப்பட்ட சவுதி அரேபியாவின் கப்பலில் பணியாற்றிய அனைத்து மாலுமிகளும் கடத்தல்காரர் களால் மிகவும் துன்புறுத்தப்பட்டதாக அந்தக் கப்பலில் மின்பொறியியலாளராகப் பணி யாற்றிய இலங்கையைச் சேர்ந்த அன்சலம் சொய்ஸா செய்தி ஊடகம் ஒன்றுக்கு தெரி வித்துள்ளார்.

கடந்த மார்ச் மாதத்தில் ஏடன் வளை குடாப் பகுதியில் வைத்து கடத்தப்பட்ட சவுதி அரேபியக் கப்பலான எம் வி அல் நிசார் அல் சவுதியில் பணியாற்றிய 11 இலங்கை மாலு மிகள், கப்பம் கொடுக்கப்பட்டதை அடுத்து விடு விக்கப்பட்டு வியாழனன்று தமது நாட்டுக்கு திரும்பியுள்ளனர்.

அந்தக் கப்பலில் 13 இலங்கை மாலுமி களும் ஒரு கிரேக்க தலைமை மாலுமியும் பணியாற்றியுள்ளனர்.

அவர்களில் ஒருவரான அன்சலம் சொய்ஸா தாம் அனுபவித்த சிரமங்கள் தொடர்பில் தெரிவிக்கையில்,

ஜப்பானில் இருந்து பெப்ரவரி 6 ஆம் திகதி தாங்கள் ஜெட்டா நோக்கிப் போய்க் கொண்டிருந்தபோது ஏடன் வளைகுடாவில் வைத்து கடற்கொள்ளைக்காரர்களால் கடத் தப்பட்டதாகவும் தங்களைப் பிடித்து அவர்கள் அடைத்து வைத்தார்கள் என்றும் தங்க ளுக்கு எந்தவிதமான வசதிகளையும் அவர் கள் வழங்கவில்லை என்றும் தெரிவித் தார்.

தாங்கள் மலசலகூடம் போவதற்குக்கூட வெறும் இரண்டு நிமிடம் தான் தரப்பட்டதாக வும் தங்களுக்கு சாப்பிடவோ குடிக்கவோ எதுவும் கிடையாது என்றும் விபரிக்க முடியாத அளவுக்கு மோசமான சிரமங்களை அனு பவித்ததாகவும் அவர் மேலும் தெரிவித் தார்.

மொத்தம் ஒன்பது மாதங்கள் தாங்கள் கொள்ளையர்களால் பிடித்து பணயம் வைக் கப்பட்டிருந்ததாக தெரிவித்த அவர் தங் களுக்கு ஆங்கிலமும் சிங்களமும் தெரியும் ஆனால் கொள்ளைக்காரர்களுக்கு சோமா லிய மொழி மாத்திரந்தான் தெரியும் என்ப தால் தகவல் பரிமாற்றமே கூட பெரிய பிரச் சினையாக இருந்ததாகவும் தெரிவித் தார்.

(ஸ்ரீ-2)

# மன்னார் மீனவர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க உத்தரவு

(கொழும்பு)

மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி யின் வங்காலைப்பாடு கடற்பரப்பில் சுமார் ஆயிரம் கிலோ எடை கொண்ட இரண்டு கடற்பன்றிகளைப் பிடித்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இரண்டு மீனவர்களை தொடர்ந்தும் எதிர்வரும்14 தினங்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதவான் கே.ஜீவராணி உத்தரவிட்டார்.

வேட்டையாடுவதற்கு தடை செய்யப்பட்ட கடற்பன்றி என அழைக்கப்படும் அரிய வகை மீன் இரண்டினை பிடித்து உயிரிழந்த நிலையில் கடற்கரைக்குக் கொண்டு வந்த போது மீனவர்களை மன்னார் பொலிஸார் கைதுசெய்தனர்.

மீண்டும் மாவட்ட நீதிமன்றத்தில் இரண்டு மீனவர்களும் ஆஜர்ப்படுத்தப்பட்ட போது குறித்த மீனவர்களை எதிர்வரும் 6 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் மாவட்ட நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# தமிழ் மாணவர்களால் கவனிக்கப்படாதுள்ள ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

**Uva Wellassa University**

பதுளை நகரத்தில் அமைந்துள்ள ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் தான் 2005 இல் இலங்கையில் அரசாங்கம் கடைசியாக தொடங்கிய பல்கலைக்கழகம். இப்பல்கலைக் கழகம் குறித்து தமிழ் மாணவர்களிடையே குறிப்பாக யாழ்ப்பாணத்தில் விழிப்புணர்வு குறைவாகவுள்ளது.

கீழ்வரும் பத்தி ஊவா வெல்லஸ்ஸ பல்க லைக்கழகம் அதன்நவீன கல்வி வாய்ப்புக்கள் குறித்து விளக்கம்பெறஉதவும்எனநம்புகிறோம்.

இப் பல்கலைக்கழகம் இலங்கையின் உள்நாட்டு உற்பத்திக்கு பெறுமதி சேர்ப்பதற் காக உருவாக்கப்பட்ட 11 கற்கைநெறிகளை கொண்டமைந்துள்ளது. அக் கற்கை நெறி களாவன,

விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், கனிய வளங்களும் தொழில்நுட்பமும், கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும், கைத்தொ ழில் தகவல்தொழில்நுட்பம், விலங்கு விஞ் ஞானம், நீர்வாழ்வளங்களும் தொழில் நுட்ப மும், ஏற்றுமதி விவசாயம், தேயிலைத் தொழில் நுட்பமும் பெறுமதி சேர்ப்பும், பனை யினத் தாவரமும் இறப்பர்பால் தொழில் நுட்பமும், தொழில் முயற்சியும் முகாமைத் துவமும்,விருந்தோம்பல் சுற்றுலா நிகழ்ச் சிகள் முகாமைத்துவம்.

**விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்**

முற்றுமுழுதாக தொழில் வாய்ப்புகளுடன் வடிவமைக்கப்பட்ட கற்கைநெறி. இது நான்கு வருட விசேட B-Tech பட்டத்தினை பின் வரும் துறைகளில் பெறுவதற்காக உருவாக் கப்பட்டுள்ளது.

1. உணவுப் பொறியியல் (Food processing and Technology)
2. Mechatronics
3. Material Science and Technology

**கனியவளங்களும் தொழில்நுட்பமும்**

இதுB.Sc நான்கு வருட சிறப்பு பட்டத் தினை பின்வரும் துறைகளில் வழங்குகிறது.

1. கனிப்பொருள் விஞ்ஞானம்
2. நீரியல் விஞ்ஞானம்

**கணனி விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்**

இது B.Sc நான்கு வருட சிறப்புப் பட்டத் தினை பின்வரும் துறைகளில் வழங்குகிறது.

1. கணனி மென்பொருள்
2. கணனி வன்பொருள்
3. கணனி வலையமைப்பு
4. பல்லூடகம் (Multimedia)
5. Artificial intelligence

**கைத்தொழில் தகவல் தொழில்நுட்பம்**

இது BIIT நான்கு வருட சிறப்புப் பட்டத் தினை பின்வரும் துறைகளில் வழங்குகிறது. இது கைத்தொழில் மென்னியல் கற்கை நெறிக்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது இலங்கையில் முகாமைத்துவ தகவல் தொழில் நுட்பத் துறையினை முன் னேற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறியாகும்.

**விலங்கு விஞ்ஞானம்**

இது B.Sc நான்கு வருட சிறப்பு பட்டத் தினை பின்வரும் துறைகளில் வழங்கு கிறது. இது இலங்கையை உள்நாட்டு கால் நடை உற்பத்தித் துறையில் தன்னிறைவடை யச் செய்வதற்காக உருவாக்கப்பட்ட கற்கை நெறியாகும்.

**நீர் வாழ் வளங்களும் தொழில்நுட்பமும்**

இது B.Sc நான்கு வருட சிறப்பு பட்டத் தினை பின்வரும் துறைகளில் வழங்குகி றது. இது இலங்கையை உள்நாட்டு நீரியல் வளம் சார்ந்த உற்பத்தித்துறையில் தன்னி றைவடையச் செய்வதற்காக உருவாக்கப் பட்ட கற்கை நெறியாகும்.

**ஏற்றுமதி விவசாயம்**

இது B.Sc நான்கு வருட சிறப்பு பட்டத் தினை பின்வரும் துறைகளில் வழங்குகிறது. இது இலங்கையை உள்நாட்டு ஏற்றுமதி சார்ந்த உற்பத்தித்துறையில் தன்னிறைவடையச் செய்வதற்காக உருவாக்கப்பட்ட கற்கை நெறியாகும்.

**தேயிலைத் தொழில்நுட்பமும் பெறுமதி சேர்ப்பும்**

இது B.Sc நான்கு வருட சிறப்புப் பட்டத் தினை பின்வரும் துறைகளில் வழங்குகிறது. இது இலங்கையை உள்நாட்டு பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை உற்பத்திக்காக உரு வாக்கப்பட்ட கற்கைநெறியாகும்.

**பனையினத் தாவரமும் இறப்பர்பால் தொழில்நுட்பமும்**

இது B.Sc நான்கு வருடசிறப்பு பட்டத் தினை பின்வரும் துறைகளில் வழங்குகிறது. இது இலங்கையை உள்நாட்டு பனையி னத்தாவர பெறுமதி சேர்ப்புக்காகவும் இறப்பர் பால் சார் உற்பத்திக்காகவும் உருவாக்கப் பட்ட கற்கைநெறியாகும்.

**தொழில் முயற்சியும் முகாமைத்துவமும்**

இது BBM நான்கு வருட சிறப்புப் பட்டத்தினை பின்வரும் துறைகளில் வழங்கு கிறது. இது முகாமைத்துவத்துடன் தொழில் முயற்சியாண்மையையும் ஒன்றிணைத்த வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மாணவர்கள்**

**விருந்தோம்பல் சுற்றுலா நிகழ்ச்சிகள் முகாமைத்துவம்**

இது BBM நான்கு வருட சிறப்புப் பட்டத் தினை பின்வரும் துறைகளில் வழங்குகிறது. இது இலங்கை சுற்றுலாத்துறை சார் நாடென்ற வகையில் இலங்கையின் சுற்றுலாத் துறையை நிர்வகிப்பதற்காக உருவாக்கப்பட்ட கற்கை நெறியாகும். இக் கற்கைநெறிகள் தமிழ் மாணவர்களை விட்டு இனியும் கைநழுவாது இருக்க இவ்விளக்கம் உதவும் என நம்புகி றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேற்ற நடவடிக்கைகள் வெற்றிகரமாக இடம் பெறுகிறது

## அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு



இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் மிகவும் வெற்றிகரமாக மேற்கொள்ளப்படுவதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

மீள் குடியேற்ற நடவடிக்கைகளில் சிறு சிறு குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் தொடர்ச்சியாக மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்திய காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ராகுல்காந்தி இலங்கைத் தமிழர் கள் தொடர்பில் அண்மையில் வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இடம்பெயர் மக்களை மீள் குடியேற்றுவதற்கான சகல முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருவதாகவும் சிறு சிறு குறைபாடுகள் காணப்படுவதனை மறுப்பதற்கில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

3இலட்சம் இடம்பெயர் மக்களை துரித கதியில் மீள் குடியேற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகளின் போது குறைபாடுகள் ஏற்படுவதனைத் தவிர்க்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே 90 வீதமான இடம்பெயர் மக்கள் மீள் குடியேற்றப்பட்டுள்ளதாகவும் இடம்பெயர்மக்களுக்கு தொழிற்பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருவதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

12ஆயிரம் முதல் 15ஆயிரம் இடம்பெயர் மக்கள் மட்டுமேஎஞ்சியிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# கனடாவில் தமிழ் இளைஞர் பிணையில் விடுதலை

புலிகளுக்காக உபகரணங்களையும் நீர்மூழ்கி கப்பல்களுக்கான மென்பொருட்களையும் கொள்வனவு செய்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்த தமிழ் இளைஞரான சுரேஸ் ஸ்ரீஸ்கந்தராஜா கனேடிய நீதிமன்றத்தினால் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

30 வயதான சுரேஸ் ஸ்ரீஸ்கந்தராஜா என்ற இந்த இளைஞர் 445 ஆயிரம் டொலர்கள் பிணையில் செல்ல நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் தமக்கு எதிரான குற்றச்சாட்டை ஆட்சேபித்து அவர் மேன்முறையீடு செய்துள்ளார்.

இந்த மேன்முறையீட்டை விசாரணைக்கு எடுத்துக் கொள்வதா? என்பது தொடர்பில் உயர்நீதிமன்றம் தீர்மானிப்பதற்கு இன்னும் 6 மாதங்கள் செல்லும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஸ்ரீஸ்கந்தராஜாவின் குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு சிறைத் தண்டனை வழங்கப்படலாம் என கனேடிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஸ்ரீ)

# 3இலட்சம் யாழ்ப்பாண வாக்காளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளன

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த 40 வீதமானவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாண்டு வாக்காளர் இடாப்பில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 3இலட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றவர்களின் பெயர்களே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளதென தேர்தல் திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் 5 இலட்சம் வாக்காளர்களின் பெயர்கள் புதிய பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த முஸ்லிம்களின் பெயர்கள் இன்னமும் வாக்காளர் இடாப்பில் உள்ளடக்கப்படவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்டவர்களில் பலர் வெளிநாடுகளில் குடியுரிமை பெற்றுக்கொண்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பி. குகநாதன் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்குச் சென்று நிரந்தரமாக வதிபவர்கள், குடியுரிமை பெற்றுக் கொண்டவர்கள் அல்லது யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறி வேறு இடங்களில் நிரந்தரமாக வதிபவர்கள் ஆகியோரின் பெயர்களே இவ்வாறு இடாப்பில் இணைத் துக்கொள்ளப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய வாக்காளர் பட்டியலை பொதுமக்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் பார்வையிடலாம் என அவர் தெரிவித்துள்ளார். தசாப்தங்களுக்கு முன்னர் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றவர்களின் பெயர்களும் இதுவரை காலமும் வாக்காளர் இடாப்பில் காணப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்காளர் இடாப்பில் பெயர்கள் விடுபட்டிருந்தால் அது தொடர்பில் முறையீடு செய்ய முடியும் எனவும் இறுதிப்பட்டியல் எதிர்வரும் ஏப்ரல்மாதம் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வாக்காளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதனால் பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் வீழ்ச்சி ஏற்படுமென குறிப்பிடப்படுகிறது.

வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படுகின்றது. புதிய வாக்காளர் இடாப்பிற்கு யாழ்ப்பாண மாவட்டத்திற்கான பாராளுமன்ற ஆசனங்களை தேர்தல் ஆணையாளர் நியமிப்பார் என சுட்டிக்காட்டப்படுகிறது. தற்போது யாழ்ப்பாண மாவட்டத்திற்காக 9 பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். (ஸ்ரீ-2)

# கல்விமாணி விரிவுரைகள்

தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப் பட்டநெறி முதலாம், மூன்றாம் வருட மாணவர்களுக்கான விசேட செயலமர்வுகள் எதிர்வரும் 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறும்.

அன்றைய தினம் ஒப்படைகள் வழங்கப்படுவதுடன் செயல் நிலை ஆய்வு தொடர்பான விடயங்களும் பூர்த்திசெய்யப்படும் எனவும் தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ். ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# யாழ்.நகர நகைக்கடை உரிமையாளர்கள் மூவரை ஏமாற்றி நகைகளை விற்ற திருடர்கள்

## யாழ்.நகரில் பரபரப்பு




(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர நகைக்கடை உரிமையாளர்களிடம் திருட்டு நகைகளை விற்ற திருடர்கள் அவர்களிடமிருந்து பணத்தைப் பெற்று மோசடி செய்த சம்பவத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் யாழ்.நகர நகைக்கடை உரிமையாளர்கள் நேற்று கடைகளைப்பூட்டி பகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது, யாழ்.நகர நகைக்கடை உரிமையாளர்கள் மூவர் வேறுமாவட்டங்களைச்சேர்ந்த மூவரிடம் நகைகளை கொள்வனவு செய்திருந்தனர். நகைகளை விற்றவர்கள் திருடர்கள் என்பதை இவர்கள் அறிந்திருக்கவில்லை.

குறித்த திருடர்களை கைது செய்த பொலிஸார் அவர்களை குறித்த நகைக்கடைகளுக்கு அழைத்துச் சென்று விற்கப்பட்ட நகைகளை கேட்டபோதே இவ்விடயம் வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக குறித்த நகைக் கடைக்காரர்களிடம் விசாரித்தபோது, ஒரு கடையில் நகையை விற்ற திருடன் பொலிஸாரினால் பிடிக்கப்பட்டு பின்னர் கடைக்கு அழைத்து வரப்பட்டு அவன் விற்ற நகைகளின் தொகைகளைப் பெற்றுச் சென்றுள்ள தாகவும் இதனால் கொள்வனவு செய்த நகையை இழந்ததோடு தனது பணத்தையும் இழந்துள்ளதாக குறிப்பிட்டார்.

இன்னொரு நகைக்கடை உரிமையாளர் ஒருவரிடம் 5 பவுண் நகைகளை வாங்கியிருந்ததாகவும் ஆனால் திருடனுடன் வந்த பொலிஸார் 12 பவுண்களைத்திருடன் குறித்த நகைக்கடைக்காரருக்கு விற்றிருப்பதாகக் கூறி அவர்களின் சிட்டைப் புத்தகங்களையும் எடுத்துச் சென்றதுடன் இவ் நகைக் கடை உரிமையாளர்களை விசாரணைக்கு வருமாறும் அழைத்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

மற்றுமொரு நகைக்கடை உரிமையாளர் முக்கால் பவுண் நகையை கொள்வனவு செய்திருந்ததாகவும் இவ் நகைக்கடை உரிமையாளருக்கு விற்ற அத்திருடன் பொலிஸாருடன் வந்து தான் 25 பவுண்களை விற்றதாகக் கூறியுள்ளான். இதை இவ் நகைக் கடை உரிமையாளர் மறுக்கவே அவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரியவருகின்றது.

பொலிஸாரோடு வந்த அத் திருடன் தான் இரு கொலைகள் செய்திருப்பதாகவும் நீயும் நகைகளைத் தரவேண்டுமென குறித்த உரிமையாளரை மிரட்டியதாகவும் தெரியவருகின்றது.

இக் களவுடன் தொடர்புடையவர்கள் அனைவரும் வேறு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என்பதோடு இவர்களை அழைத்து வந்த பொலிஸாரும் வேறு மாவட்டங்களில் பணிபுரிபவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவத்தை நகைக்கடை உரிமையாளர்கள் வணிக சங்கத்தினரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து அங்கு பகிஸ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து கடை உரிமையாளர்களுடன் கலந்துரையாடல் நடைபெற்றது.

இங்கு கருத்து வெளியிட்ட யாழ்.வணிகர் சங்கப்பிரதிதி, பெறுமதி வாய்ந்த பொருட்களைக் கையாளும் உங்களுக்கு இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதனை தவிர்க்க முடியாதுள்ளது.

எனவே இவ்வாறான சம்பவங்கள் ஏற்படாமல் தவிர்க்க நகை உரிமையாளராகிய நீங்கள் மிக மிக அவதானமாகச் செயற்பட வேண்டும்.

நீங்கள் நகைகளை கொள்வனவு செய்யும்போது குடும்பட்டைஇலக்கம், தேசிய அடையாள அட்டை என்பவற்றை பெற்று உறுதிப்படுத்திய பின்னர் நகைகளைக் கொள்வனவு செய்தல்வேண்டும் .அத்தோடு இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் நடைபெறாது இருக்க தான் உரிய நடவடிக்கை எடுப்பேன் எனக் கூறினார்.

தற்போது பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நகைக் கடை உரிமையாளரை விடுவிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்களுடன் கதைத்து விளக்கமளிக்கப்படவுள்ளது என்றும் அதற்கான செயலில் தான் இறங்கி யுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில கல்வி பயிலும் வெளிநாட்டு மாணவர்கள் 150 பேருக்கு விசேட ஜனாதிபதி புலமை பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் நெங்கே யங் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வியமைச்சுக்கு இடையில் முதுமாணிப் பட்டதாரி புலமைப்பரிசில் பரிமாற்றம் தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்று முன் தினம் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போதே உயர்கல்வியமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க புலமைப்பரிசில்கள் தொடர்பான தகவல்களை வெளியிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பால் போல் நிலவு எறிக்க
பார்த்து அதிலே சோறு தின்ன
பாலன் பிறந்து வர
பாக்கியம் தா ஆண்டவரே – நாட்டார் பாடல்


வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாழ்.குருமுதல்வரின் நத்தார் வாழ்த்துச்செய்தி

கிறிஸ்துபிறப்பின் இனியநாளில் வலம்புரி வாசகர்களை வாழ்த்துவதில் அகமகிழ்கின்றேன். 2010 ஆம் ஆண்டின் இறுதியில் அநேக சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களுக்குள் பிரவேசித்திருக்கும்எமது தேசத்திற்கு கிறிஸ்து பிறப்பின் நற்செய்தி ஒரு புதிய நம்பிக்கையுடனான எதிர்பார்ப்பைக் கொடுக்க இறைவனை வேண்டுகின்றேன்.

உரோமானிய பலம் பொருந்திய உரோமையர் ஏகாதிபத்திய ஆட்சிக்குள் யூத மத வைராக்கிய அரசியல் சூழ்நிலைக்குள் பெத்தலகேம் என்னும் சிற்றூரில் இறைமைந்தன் சிறுபாலகனாக மாட்டுக் குடிலில் பிறந்தார். பலமற்ற, பலவீனமான இப்பாலகன் இடம்பெயர்ந்த குடும்ப சூழ்நிலையில் பிறந்து எல்லா மனிதர்க்கும் மகிழ்ச்சி உண்டாக்கும் நற்செய்தியை அறிவித்தார். மாறிவரும் எமது தேசத்தின் அரசியல் சூழ்நிலைகள், பொருளாதார நெருக்கடிகள், எதிர்காலத்தின் கேள்விக்குறிகள், பாகுபாடுகள், பிரிவினைகள் இவற்றின் மத்தியில் கிறிஸ்து பாலகன் தரும் நற்செய்தி வாழ்வதற்கும் மனித குலத்தின் நல்விழுமியங்களுக்குமான நற்செய்தி ஓர் புதிய நம்பிக்கையைத்தர இறைவனை வேண்டுகின்றேன்.

இறைவன் தன் ஒரே மைந்தனை எம்முடன் வாழ பகிர்ந்து கொண்ட இந்நாளில் நாமும் பலமிழந்த வலுக்குன்றிய இயலாமையில் வாழும் மக்களிடத்தில் கரிசனையுடன் அன்பைப் பகிர்ந்து கொள்ள முன்வருவதே இச்சிறப்



பான தினத்தில் எம் யாபேருக்கும் கொடுக்கப்படும் சிறப்பான அழைப்பாகும்.

கிறிஸ்து பாலகனின் ஆசீர் இன்நன்னாளில் உங்கள் யாவர் மேலும் இருக்கட்டும்.

வண.செ.பி.நேசகுமார்,
யாழ்.குருமுதல்வர்,
இலங்கைத்திருச்சபை.

# யேசு பாலகா எம் இனத்தைப் பார்த்தால் உன் உதிரம் கொட்டும் ஐயா

இன்று யேசு பாலகன் பிறந்த நாள்.மேய்ப்பார் இன்றி மந்தைகளாய் மனித இனம் திரிந்த வேளை பிதாமகன் யேசு பாலகன் இந்தப் பூமியில் அவதரித்தார்.

அவரின் புனிதப் பிறப்பை ஆண்டு தோறும் அனுஷ்டிக்கிறோம்.ஆசிகள் கூறுகின்றோம்.ஆனாலும் துன்பம் நீங்கவில்லை.

காரணம் மந்தைகளாய் திரிந்த மானிடம் மனிதக் குணத்தோடு வாழும் வகை தெரியாமல் மமதை கொண்டு விட்டது.

'அறுகின்ற நாளைக்கு எழுவது அகந்தை' என்ற எங்கள் ஊர்ப் பழமொழியின் யதார்த்தமே நடந்து கொண்டிருக்கின்றது.

உண்மை, நேர்மை, விசுவாசம், நம்பிக்கை இவை யாவும் இன்று அடியோடு அழிந்து போயின.

மோசடிகள், ஏமாற்றங்கள், களவுகள், கொள்ளைகள், கொலைகள் என எங்கும் அட்டூழியங்களின் தாண்டவம்.

சமயங்கள், சாத்வீகத்தைப் போதிக்காமல் ராட்சதத்தை போதிக்கின்றன.பக்குவமான உருவங்கள்,ஆத்மீகவாதிகள் போன்ற வெளித்தோற்றங்கள், ஆனால் உள்ளுவதெல்லாம் அநியாயத்தின் விதைப்புகள்.

இலங்கைத் திருநாடு இறை வழிபாட்டிலும் சமயச் சடங்குகளில் அதிகமான நேரத்தை இழக்கின்ற நாடு. ஆனால் இங்குதான் கொலைகள் அதிகம் நடந்துள்ளன.

அநாதைக் குழந்தைகள், இளம் விதவைகள்,அங்கவீனமாக்கப்பட்டவர்கள்.இப்படியே ஒரு பெரும் துயரப் பட்டியல்.

இதைச் செய்தது யார்?செய்வித்தது யார்? இந்தக் கேள்விகளுக்கு விடையும் விளக்கங்களும் தெரியாத போதும், சமயங்கள் அவற்றை பிரதிநிதித்துவம் செய்பவர்கள் ஏழைகளுக்காக –பாதிக்கப்பட்டவர்களுக்காக – ஒடுக்கப்பட்டவர்களுக்காக குரல் கொடுக்காமல் போலித்தனமாய்ச் செயற்படுகின்றனர்.

சாதாரண மக்கள் வாழத் தெரியாமல் இருக்க ,சமயத் தலைவர்கள் வாழக் கற்றுக்கொண்டனர்.கூடவே நடிக்கவும் விழுந்தபாட்டில் குறிசுடவும் பழகிக்கொண்டுவிட்டனர்.

ஓ! இறைமகனே! யேசு பாலகா! எங்கள் மண்ணில் நடப்பவற்றை ஒரு கணம் பார்! சிலுவையில் அறையப்பட்ட போது உன் திருவுடலில் இருந்து உதிர்ந்த குருதியை விட அதிக குருதியை எங்களுக்காக சொரிவாய். அந்தளவிற்கு துயரம் அதிகமாக இருக்கும்.

பாதை தெரியாமல், இருளில் வாழ்ந்த மானிடத்தை வழிப்படுத்த அவதரித்த யேசு பாலகா! எங்கள் மண்ணிலும் உன் பிறப்பு நடக்கட்டும்.உன் பிறப்பால் எங்கள் பாவம் ஒழியட்டும்.நீதி பிறக்கட்டும்.நியாயம் மலரட்டும்.மோசமான அரசியல் ,அதற்காகத் துதிபாடும் நிர்வாகக் கலாசாரங்கள் அத்தனைக்கும் முடிவு கிடைக்கட்டும்.

பாலகனே உன் இரண்டாவது பிறப்பு எல்லாம் இழந்த தமிழ் மக்களின் மண்ணில் நடக்கட்டும். ஆமேன்

## பாலன் பிறந்தார்

துன்புற்று வாழ்ந்த மக்களை மீட்டிடவே
துன்பங்களை சுமந்திட பாலகன் பிறந்தார்
அன்னையின் மடிதனில் தவழ்ந்த பாலனை
அற்புத வால்வெள்ளி வழி காட்டிடவே
பொன் வெள்ளி தூப மோடு
பெத்தலகேம் நகர் வந்தனர் மூவேந்தரும்
நன்மைகள் செய்து வாழ்த்திட்ட இயேசுவின்
நத்தார் வாழ்த்துக்களை பிறருடன் பகிர்வோம்

ஆர்.ரி. திவாகரன்
அல்வாய்

## வெண்பா

வெள்ளிமலை மீதில் மிருகம்
அடை குகையில் அல்லிநடுச்
சாம
அமல கன்னி– புல்லணையில்
வந்த திருப்பாலனை நாம் சாஷ்
டாங்கம் செய்து சுப வந்த
னங்கள் சாற்றிடுவோம் வாரீர்

வியாகுலம் பிரான்சீஸ்,
ஊர்காவற்றுறை.

# இயேசு பாலனின் வருகையை கொண்டாடும் நத்தார் பெருவிழா

நத்தார் விழா நானிலம் எங்கும் மகிழ்வூட்டும் விழாவாக கொண்டாடி மகிழ வாழ்த்துக்கள், விருந்தோம்பல்கள், நல்லுறவாடல்கள், நம்பிக்கையூட்டும் விழாவாக இனம்,மதம், மொழிகடந்து ஒற்றுமை விழாவாகியதை உலக கொண்டாட்டங்கள் வெளிப்படுத்துகின்றன.

உண்மை,நீதி விடுதலைக்காக பிறந்தவரை உலகம் உடன் அறிந்து கொள்ளாததால் பாமரரான வயல் காக்கும் இடையர்களுக்கு முதல் செய்தி கிடைத்தது. வான தூதரின் செய்தி கேட்டு தேடிச்சென்றனர்.

"அஞ்சாதீர்! இதோ எல்லா மக்களுக்கும் பெரும் மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். இன்று ஆண்டவராகிய மெசியா எனும் மீட்பர் உங்களுக்காக தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்.கண்டுகொண்ட இடையர்கள் பாரில் பகிர்ந்தனர்.எமது பொறுப்புக்கள், கடமைகள், ஆன்மீக அறிவூட்டல்கள், அலட்சியப்படாமல் ,எமது சந்ததிகள் அறிந்து கொள்ள உண்மைக்கு சாட்சி சொல்லும் சீடர்களே நத்தார் செய்தியை திரிவுபடாமல், திசை மாறாமல் ,பொருளற்றதாக இல்லாமல் அர்த்தமூட்டும் விழாக்கள் மூலம், பகிர்தல் மூலம், சந்திப்புக்கள் மூலம் சாட்சியப்படுத்த கிடைத்த சந்தர்ப்பங்களாக வாழ்த்துக் கூறுவோம்.

மூவிராசாக்களே ஞானிகளாக வால்வெள்ளி நட்சத்திர வழிகாட்டலுடன் பாலன் யேசுவை பரிசுகளுடன் தரிசித்து வழிபட்டனர். வாழ்த்துப்பெற்றனர்.

இன்றும் எம்தேசத்தின் அவலம் தீர ,அமைதிபிறக்க ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் பயன் உள்ள தாக்கி வாழ்த்துவோம். இருளைப் பழிப்பதை விட ஒளியேற்றும் செயல்களால் மகிழ்வூட்டுவோம்.

நத்தார்வாழ்த்துக்கள்!

யோசப்பாலா
கத்தோலிக்க இலக்கிய வட்டச் செயலாளர்.

## அடையாள அட்டை கண்டெடுப்பு

உரும்பிராய் மேற்கைச் சேர்ந்த சத்தியவரதன் லலிதாரதி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (இல:677123508V) கைப்பை ஒன்றும் யாழ்.போதனா வைத்தியசாலை வளாகத்தினுள் கண்டெடுக்கப்பட்டு வைத்தியசாலை காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளுமாறு பணிப்பாளர் ச.சிறிபவானந்தராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ–2)

## ஆன்மீக நிகழ்வுகள்

லண்டன் மெய்கண்டார் ஆதீன வெள்ளி விழா ஆன்மீக நிகழ்வுகள் இன்று சனிக்கிழமை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் ஒரு மணி வரை திருவாசக முற்றோதல் நடைபெறவுள்ளதுடன் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ–2–9)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



நம் சமுதாயமும் மோசமானதன்று, நல்லது தான். அது இன்னும் நல்லதாக அமைய வேண்டும் என்பது தான் என் அவா. வளர்ச்சி என்பது தவறிலிருந்து உண்மைக்குச் செல்வதன்று. தீமையிலிருந்து நன்மைக்குச் செல்வதுமன்று. உண்மையிலிருந்து மேலான உண்மைக்குச் செல்வது. நன்மையிலிருந்து மேலான நன்மைக்குச் செல்வது, அதிலிருந்து மிகமிகச் சிறந்ததற்குச் செல்வது இப்படித் தான் சமுதாயம் அமையவேண்டும் என்று நான் விரும்புகிறேன். என் நாட்டு மக்களிடம் இதுவரைக்கும் அவர்கள் நல்லபடியாகத்தான் செயலாற்றி வந்துள்ளனர். இன்னும் சிறப்பாகச் செயலாற்ற வேண்டிய காலம் இப்போது வந்துள்ளது என்று நான் கூறுவதுண்டு.

இதுவே நான் காட்டும் வழி. இந்துகள் எதையும் துறக்க வேண்டியதில்லை. நமது பழம்பெருமுனிவர்கள் வகுத்துக் கொடுத்த பாதையை அவர்களுக்குச் சுட்டிக்காட்டுவது தான் என் வழி. காலங்காலமாக நாம் பட்ட அடிமைத்தனத்தினால் வந்த உணர்ச்சியற்ற ஜடத் தன்மையினை உதறி எறியும்படி அவர்களுக்கு வழிகாட்டுவது தான் என் நெறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐவரிகோஸ்ட் தேர்தல் வன்முறையால் இதுவரை 173 பேர் உயிரிழந்துள்ளனர்

## ஐ.நா. தகவல்

(அபிஜான்)

ஆபிரிக்க நாடான ஐவரிகோஸ்ட் ஜனாதிபதி தேர்தலில் ஏற்பட்ட வன்முறையால் இதுவரை 173 பேர் பலியாகியுள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது. ஐவரிகோஸ்ட் நாட்டின் ஜனாதிபதி தேர்தல் கடந்த நவம்பர் 2 ஆம் திகதி நடந்தது. இதில் லூராண்ட் கபாகோ மற்றும் அலாசான் கூவாட்ரா ஆகியோர் ஜனாதிபதி வேட்பாளர்களாக போட்டியிட்டனர்.

இதில் அலாசான் கூவாட்ரா வெற்றி பெற்றதாக தேர்தல் கமிஷன் அதிகாரபூர்வமாக அறிவித்தது. எனினும் இதனை லூராண்ட் கபாகோ மறுத்து தான் ஜனாதிபதியாக பிரகடனப்படுத்தினார். இது தொடர்பாக அலாசான் கூவாட்ரா சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலால் நாட்டில் வன்முறை ஏற்பட்டது. இது குறித்து ஐ.நா. தலையிட்டு அங்கு அமைதிப்படையினை நிறுத்தியுள்ளது. எனினும் இரு தலைவர்களையும் அழைத்து ஜெனிவா நகரில் பல சுற்று பேச்சு வார்த்தைகள் நடத்தியும் சமரசம் ஏற்படவில்லை. இந்நிலையில் ஐ.நா. மனித உரிமை ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தேர்தல் வன்முறையால் நாட்டில் இதுவரை 173 பேர் பலியாகியுள்ளதாக கூறியுள்ளது. இது குறித்து விசாரணை கமிஷன் அமைத்து உத்தரவிட்டுள்ளது. (2)

# தலிபான்களுக்கு எதிரான போரில் 800 ஆப்கான் இராணுவத்தினர் பலி

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிரான போரில் இந்தாண்டு மட்டும் 800 ஆப்கான் இராணுவத்தினர் பலியாகியுள்ளதாக அந்நாட்டு இராணுவ அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த 2001 ஆம் ஆண்டிலிருந்துதான் தலிபான்கள் ஆப்கானிஸ்தானில் பல்வேறு வகைகளில் தற்கொலை படைதாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் ஆப்கானிஸ்தான் இராணுவ செய்தி தொடர்பாளர் ஜாபீர் ஆஷிமீ செய்தியாளர்களுக்கு கூறியதாவது, ஆப்கானில் நேட்டோ படையுடன் இணைந்து இராணுவத்தினர் தலிபான்களை ஒடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில் இந்தாண்டு 800 ஆப்கான் இராணுவ ஜவான்கள் பலியாகியுள்ளனர்.

இதில் கடந்த 2009 ஆம் ஆண்டில் மட்டும் 632 பேர் உயிரிழந்துள்ளனர். நேட்டோ தரப்பில் 700 ஜவான்கள் கொல்லப்பட்டனர். மேலும் 2400 அப்பாவி மக்கள் கடந்த 10 ஆண்டுகளில் பலியாகியுள்ளனர்.

இதில் குழந்தைகள், பெண்களும் அடங்குவர். ஹெல்மாண்ட் மாகாணத்தில் தான் தலிபான்கள் ஆதிக்கம் அதிகம் உள்ளது என அவர் கூறினார். (2)

# பிரான்சில் சீரற்ற காலநிலையால் விமானப் போக்குவரத்து பாதிப்பு

(பாரீஸ்)

பிரான்சில் நிலவி வரும் கடும் பனிப்பொழிவு மற்றும் சில்லிடும் வானிலையால் விமானப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து போக்குவரத்துத் துறை அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

பாதித்த மேற்படி விமானங்களின் சேவைகள் அடியோடு இரத்து செய்யப்பட்டுள்ளதாகவும் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் விமான நிலையத்திலேயே தஞ்சம் புகுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விரைவில் நிலைமை சீராகும் என்று நம்பப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (2)

# போர் ஒத்திகை தொடர்ந்து நடத்தப்பட்டால் தென்கொரியா மீது அணுகுண்டு வீசுவோம்

## வடகொரியா மிரட்டல்



(சியோல்)

தென்கொரியாவின் யான்பியாங் தீவு மீது கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி வடகொரியா பீரங்கி தாக்குதல் நடத்தியது. அதில் 4 பேர் கொல்லப்பட்டனர். இத்தீவு வடகொரிய எல்லையில் உள்ளது. இதனால் அங்கு போர் பதற்றம் நிலவி வருகிறது.

இந்த நிலையில் தென்கொரியா தனது நட்பு நாடான அமெரிக்காவுடன் சேர்ந்து யான்பியாங் தீவில் கடற்படை மூலம் போர்ப்பயிற்சி ஒத்திகை நடத்தியது. இதையடுத்து பதற்றம் மேலும் அதிகரித்தது.

சீரற்ற காலநிலையால் இந்தப் போர் ஒத்திகை சில நாட்கள் நிறுத்தி வைக்கப்பட்டது. இதையடுத்து பதற்றம் குறைந்தது. தற்போது தென்கொரியாவும் அமெரிக்க இராணுவமும் சேர்ந்து போர் ஒத்திகையை தொடங்கியுள்ளன.

கடற்படையினர் யான்பியாங் தீவில் கடந்த புதன்கிழமை முதல் மீண்டும் போர் ஒத்திகையை தொடங்கினர். அதேநேரத்தில் தென்கொரியாவின் மலைப்பகுதியான யோசியானில் துப்பாக்கி சுடும் பயிற்சி மையம் உள்ளது. வடகொரியாவின் எல்லையில் உள்ள இந்த மையத்தில் தென்கொரியா இராணுவம் பயிற்சி மேற்கொண்டுள்ளது.

இங்கு 800 வீரர்கள், 30 பீரங்கிகள், 11 கவச வண்டிகள், 6 ஜெட் விமானங்கள் மற்றும் 36 போர் விமானங்கள், 7 ஹெலிகொப்டர்கள் மற்றும் பல நவீன ஆயுதங்கள் குவிக்கப்பட்டு போர் பயிற்சி நடக்கிறது. குண்டுகள் மற்றும் ரொக்கெட்டுகளை வீசி பயிற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது வடகொரியாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது. இதேநிலை தொடர்ந்தால் தென்கொரியா மீது மீண்டும் போர் தொடுக்க நேரிடும். அப்போது அந்நாட்டின் மீது அணுகுண்டு வீசி தாக்குதல் நடத்துவோம் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

வடகொரிய இராணுவ மந்திரி நிம்யங்-சன் கூறும் போது, போர் ஒத்திகை பயிற்சி நடத்தி கொரிய தீபகற்பத்தில் தென்கொரியா போர் பதற்றத்தை ஏற்படுத்தி வருகிறது. இந்த பயிற்சி தொடர்ந்தால் வடகொரியா பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது. தென்கொரியாவில் உள்ள யாண்பியாங் தீவு மீது மீண்டும் போர் தொடுப்போம்.

ஈவு இரக்கமின்றி அணுகுண்டு வீச நேரிடும் என்று மிரட்டல் விடுத்துள்ளார். போர் ஒத்திகையில் ஈடுபடும் இராணுவ வீரர்களை தென்கொரிய ஜனாதிபதி லீ மியுங்-பாக் பேசும் போது வடகொரியா மீண்டும் தாக்கினால் இரக்கமின்றி அதை பழிக்குப் பழி வாங்குவோம் என சூளுரைத்தார்.

அதைத் தொடர்ந்து ஆத்திரமடைந்த வடகொரியா இதுபோன்ற போர் மிரட்டலை விடுத்துள்ளது. இதற்கிடையே தங்களின் பாதுகாப்பு நடவடிக்கைக்கும் இராணுவத்தின் திறமையை மேம்படுத்தவும்தான் இந்த போர் ஒத்திகை நிகழ்த்தப்படுகிறது என தென்கொரியா அறிவித்துள்ளது. அணுகுண்டு வீசுவோம் என வடகொரியா மிரட்டியுள்ளதால் கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம் தொற்றியுள்ளது. (ஸ்ரீ-2)

# இத்தாலியிலுள்ள தூதரக அலுவலகங்களில் குண்டுவெடிப்பு

இத்தாலியில் உள்ள எதென்ஸ் நகரில் கடந்த மாதம் வெளிநாட்டு தூதரகங்கள் மற்றும் அரசு அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்ட பொதிகளில் இருந்து குண்டுகள் வெடித்தன. இது தொடர்பாக ஒரு தீவிரவாத கும்பலை பொலிஸார் கைது செய்தனர்.

இந்தப் பரபரப்பு அடங்குவதற்குள் நேற்று முன்தினம் இத்தாலி தலைநகர் உரோமில் தூதரக அலுவலகங்களில் மீண்டும் பொதி குண்டு வெடித்தது.

சுவிற்ஸர்லாந்து, சிலி நாடுகளின் தூதரகங்களுக்கு வந்த பொதிகள் மற்றும் தபால்களை பிரிக்கும் பணியில் ஊழியர்கள் நேற்று முன்தினம் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது அந்த தூதரகங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்பட்ட குண்டுகள் வெடித்தன.

இதில் பொதிகளை பிரிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த 2 பேர் காயம் அடைந்தனர். இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது. உடனே பொலிஸார் அங்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர். (ஸ்ரீ-2)

# ஈரான் மீது புதிய பொருளாதார தடைகளை விதித்தது அமெரிக்கா

(வோஷிங்டன்)

அணு ஆராய்ச்சியில் ஈடுபட்டு இருக்கும் ஈரான் அணு ஆராய்ச்சியை கைவிட மறுத்து விட்டதால் அதை மிரட்டி பணிய வைப்பதற்காக அந்த நாட்டின் மீது புதிய பொருளாதார தடைகளை அமெரிக்க விதித்துள்ளது.

ஈரான் இராணுவத்தின் நிதி வலையமைப்பு மீதும் தேசிய கப்பல் கழகம் மீதும் இந்தத் தடை விதிக்கப்பட்டது. ஈரான் அணு ஆராய்ச்சிக்கு தேவைப்பட்ட பொருட்களை வாங்குவதற்கு நிதி வலையமைப்பும் வாங்கப்பட்ட பொருட்களை ஈரானுக்கு கொண்டு வருவதற்கு கப்பல் கழகமும் பயன்படுவதால் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. சபை, ஐரோப்பிய ஒன்றியம், ஜப்பான், தென்கொரியா ஆகியவையும் ஈரானை தண்டிக்கும் வகையில் நடவடிக்கை எடுத்துள்ளன. (ஸ்ரீ-2)



கொரிய தீபகற்பத்தில் இடம்பெற்று வரும் போர் நடவடிக்கைகள் குறித்து சியோலின் வடபகுதியிலுள்ள யாங்க்கு நகரிலுள்ள இராணுவ வீரர்களை தென்கொரிய ஜனாதிபதி லீ மியங்-பக் சந்தித்து கலந்துரையாடினார்.

# இந்தியாவின் சிறந்த மனிதர் பட்டியலில் ரஜனிகாந்த்



பிரபல போர்ப்ஸ் இந்திய இதழின் 2010 ஆம் ஆண்டின் சிறந்த மனிதர்களுள் ஒருவராக நடிகர் ரஜனிகாந் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச அளவில் மிகப் புகழ்பெற்ற போர்ப்ஸ் பத்திரிகை வர்த்தக உலகின் மிக முக்கியமாகப் பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் இந்தப் பத்திரிகையின் இந்தியப் பதிப்பின் 2010 ஆம் ஆண்டு சிறப்பிதழ் வெளியாகியுள்ளது. அதில் தொழிலதிபர் ஆனந்த் மஹிந்திரா, பீகாரின் சாதனை முதல்வர் நிதீஸ்குமார், மத்திய அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ், 3 இடியட்ஸ் தந்த ராஜ்குமார் ஹிரானி என 2010 ஆம் ஆண்டில் பல துறைகளில் சாதனை படைத்தவர்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் வெளியாகியுள்ளது.

அந்தப் பட்டியலில் எந்திரன் மூலம் சாதனை படைத்த ரஜனியின் பெயரும் இடம் பெற்றுள்ளது.

இருபது ஆண்டுகள் கழித்து மீண்டும் வந்தார். பாலிவுட்டை வென்றார் என்று ரஜனிக்கு புகழாரம் சூட்டிய இவ்விதழ் இதுவரை வசூலில் முதலிடத்தில் இருந்த ராஜ்குமார் ஹிரானியின் 3 இடியட்ஸ் படத்தை ரஜனியின் எந்திரன் இரண்டாம் இடத்துக்கு தள்ளிவிட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாழ்வகத்தில் நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், பங்குத்தந்தை வணபிதா.றெக்ஸ் சவுந்தரா ஆசியுரை வழங்குவதையும், வாழ்வக மாணவர்களின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம்.

# வலி தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

## பொது அறிவித்தல் - 2011

**01.மானிப்பாய் பட்டினம், மானிப்பாய் கிராமம், பண்டத்தரிப்பு பட்டினம், பண்டத்தரிப்பு கிராமம் ஆதனவரி பற்றிய அறிவித்தல் – 2011**

வரியிறுப்பாளர்களுக்கு,

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 141 ஆவது பிரிவின்கீழ் உரித்தாக்கப்பட்டுள்ளஅதிகாரங்களின்படி தற்போது அமுலில் உள்ள வருடாந்த மதிப்பீட்டிற்கமைய (10%) 2011 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி அறவீடு செய்யப்பட வேண்டுமென தீர்மானிக்கப் பட்டுள்ளது. ஆண்டு முழுவதற்குமுரிய வரித்தொகையை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோருக்கு அவ் வருடத்திற்கான மொத்த வரியில் 10% கழிவும் ஒவ்வொரு கந்தாயங் களுக்குரிய வரியை அந்தந்தக் கந்தாயத்தின் முதல்மாத இறுதி நாளுக்கு முன் செலுத்துவோருக்கு 05% கழிவும் வழங்கப்படும்.

1ம் கந்தாய வரி மார்ச் 31 ம் திகதிக்கு முன்பும்
2ம் கந்தாய வரி யூன் 30 ம் திகதிக்கு முன்பும்
3ம் கந்தாய வரி செப்டெம்பர் 30 ம் திகதிக்கு முன்பும்
4ம் கந்தாய வரி டிசெம்பர் 31 ம் திகதிக்கு முன்பும் செலுத்தப்படல் வேண்டும்.

செலுத்தத் தவறின் வசிப்பிடங்கள், வெற்றுக் காணிகளுக்கு 15% உம் வியாபார நோக்கங்களுக்காக பாவிக்கப்படும் ஆதனங்களுக்கு 20% உம் விறாந்து கட்டணமாக வரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரியை 31.01.2011 ம் திகதிக்கு முன் அந்தந்த உப அலுவலகங்களில் நிலுவையின்றி செலுத்தி வரிக்கழிவுகளை பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் எமது சபை எல்லைக்குள் ஆதனங்களைக் கொள் வனவு செய்பவர்களும் ஏற்கனவே கொள்வனவு செய்து சோலைவரிப் பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளாதவர்களும் எமது உப அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு பெயர்மாற்றத்தினை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

**02. துவிச்சக்கர வண்டி, வளர்ப்புநாய் உரிமம் பெறல் – 2011**

2011 ம் ஆண்டு துவிச்சக்கர வண்டி, வளர்ப்பு நாய்களுக்கான உரிமத்தை பங்குனி மாதம் 31 ம் திகதிக்கு முன்னர் பெற்று சபையுடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**03. வீடமைப்பு நகர அபிவிருத்தி கட்டளைச்சட்ட பிரிவு 268இன் பிரகாரமான அறிவித்தல்**

03.01 வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார் கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், குழாய்க் கிணறுகள், கிணறுகள் என்பவற்றை அமைத்தல், புதுப்பித்தல் வேலைகள் செய்தல் போன்ற சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றம் என்பதனை அறியத்தருகிறேன். எனவே வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையால் விநியோகிக் கப்படும் விண்ணப்பப் படிவத்தின் மூலம் விண்ணப்பம் செய்து சபையின் முன்னனுமதி பெறப்படாது கட்டப்படும் கட்டடங்கள் யாவும் எதுவித நட்டஈடும் வழங்கப்படாது சபையினால் அகற்றப்படும்.

03.02 ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடங்கள் கட்டி முடிக்கப்படாத பட்சத்தில் அனுமதியைப் புதுப்பித்தல் வேண்டும்.

03.03 அனுமதி பெற்று கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய குடியமர்வுச் சான்றிதழை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

**04. வியாபார உரிம அனுமதிப்பத்திரம் 2011**

இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் 2011 ஆம் ஆண்டிற்கான வியாபார உரிம அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான விண்ணப்பப் படிவத்தை பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2011 ஆம் திகதிக்குள் செலுத்தி உரிமத்தினை பெற்று வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

**05. பட வரைஞராக பதிவு செய்தல்**

2011 ஆம் ஆண்டு பட வரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2011 ஆம் ஆண்டு ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை செய்துகொள்ள அல்லது புதுப்பிக்க முடியும்.

**வலி.தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**
**25.12.2010**

(சி-1959)

**திருமதி புஸ்பமலர் சிவலிங்கம்**
**செயலாளர்,**
**வலி தென்மேற்கு பிரதேச சபை.**

# யாழ். மாவட்டத்தில் மீள் குடியமர்ந்த முஸ்லிம்களுக்கு 6 மாத நிவாரணம்

## யாழ். அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் மீள் குடியமர்ந்த 708 குடும்பத்தைச் சேர்ந்த 2 ஆயிரத்து 942 முஸ்லிம் மக்களுக்கு 6 மாதத்திற்கான உலர் உணவு வழங்கும் திட்டம் இன்று ஆரம்பிக்கப்படும் என யாழ் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.



யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக உணவுத்திட்டத்தின் கீழ் முஸ்லிம் மக்களுக்கு உலர் உணவு வழங்கத் தீர்மானித்து உள்ளோம். இதில் 678 குடும்பங்கள் யாழ்.நகரிலும், சாவகச்சேரியில் 76 குடும்பங்களும், வேலணையில் இரண்டு குடும்பங்களும் உள்ளடங்குகின்றன.

இதேவேளை முஸ்லிம் மக்களின் அபிவிருத்திப் பணிகளுக்கும் பல மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஒஸ்மேனியா பாடசாலையின் திருத்த வேலைகளுக்காக 8 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு ஒப்பந்த காரர்களுக்கான கேள்வியும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முஸ்லிம் மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள உள்வீதிகள் புனரமைப்புக்கென 26 மில்லியன் ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

# மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்படவேண்டியது அவசியம்

## கோப்பாய் பிரதேச செயலர்

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து மீள் குடியமர்ந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த வழங்கப்படும் உதவிகள் மூலம் அபிவிருத்தியை முன்னெடுக்க முடியும் என கோப்பாய் பிரதேச செயலர் பிரதீபன் தெரிவித்தார்.

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மீள் குடியமர்ந்த விவசாயிகளுக்கான நீர் இறைக்கும் இயந்திரம் நேற்று கோப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்,

போரூட் நிறுவனத்தால் இன்றைய தினம் 71பேருக்கு நீர் இறைக்கும் இயந்திரம் கையளிக்கப்படுகின்றது. இதனை நீங்கள் தகுந்த முறையில் பயன்படுத்தி அதன் மூலம் உங்கள் வாழ்க்கையை விருத்தி செய்ய வேண்டும்.

உதவிகள் தினந்தோறும் கிடைப்பது இல்லை. கிடைப்பதை சரிவர பயன்படுத்தினால் அதன் மூலம் உங்கள் தேவைகளை நாங்களே பூர்த்தி செய்ய முடியும்.

உங்களின் தேவைக்காக வழங்கப்பட்ட இந்த இயந்திரங்களை கைமாறு செய்யவோ விற்கவோ உங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை.

அத்தோடு உங்கள் பிரதேசத்தின் கிணற்றின் ஆழத்தை கருத்தில் கொண்டே உங்களுக்கு இயந்திரங்கள் வழங்கப்பட்டன என்பதையும் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

விவசாய நடவடிக்கைகள் தடைப்படக் கூடாது என்பதற்காக உங்களுக்கு வழங்கப்பட்ட உபகரணத்தை தகுந்த முறையில் பயன்படுத்தி பயன்பெற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-6)

# கர்ப்பிணிகளுக்கு தடுப்பூசி வழங்கல்

தற்போது நாட்டின் சில பகுதிகளில் இன்புளுவன்சா ஏ,எச்1,என்1 காய்ச்சல் பரவி வருகின்றது. இந்நோய் நாட்டின் சகல பகுதிகளிற்கும் பரவுவதற்கு வாய்ப்புள்ளது. எனவே நாட்டிலுள்ள அனைத்து கர்ப்பிணி தாய்மார்களுக்கும் இத் தடுப்பூசியை வழங்க மத்திய சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

எனவே கர்ப்பிணி தாய்மார்கள் தமக்கு அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்புகொண்டு இத் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளுமாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானப் பேச்சுக்காலங்களின் போது புலிகளுக்கு அரசியல் நாட்டம் இல்லை

## நீதி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான சமாதான உடன்படிக்கைக் காலப்பகுதியில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுக்களின்போது அரசியல் தீர்வு குறித்தே அதிகமாக பேசப்பட்டது.

எனினும் புலிகளுக்கு அரசியல் தீர்வில் நாட்டம் இருக்கவில்லை என்று நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

சமாதான காலப்பகுதியில் அவர்கள் தம்மை பலப்படுத்திக்கொள்வதில் குறியாக இருந்தமையாலேயே பேச்சுக்கள் கைவிடப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

அம்பாறையில் நடைபெற்ற பொலிஸ் மற்றும் அரச அதிகாரிகளை தெளிவுபடுத்தும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில், நாட்டில் யுத்தமொன்று இல்லாத காலப் பகுதியில் நீதியமைச்சின் பொறுப்பினை ஜனாதிபதி எனக்கு வழங் கியிருக்கின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது.

பொறுப்புள்ள அரசு என்ற வகையில் ஜனாதிபதியினால் புலிகள் தொடர்பில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை சகல தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்றார். (ச)

# தென்பகு...

விஜயம் செய்துள்ளனர்.

போர் இடம்பெற்ற பிரதேசங்களைப் பார்வையிடுவதற்காகவும் மத வழிபாடுகளை மேற்கொள்வதற்காகவும் சுற்றுலாநோக்கிலேயே அதிகளவானவர்கள் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்வதாகக் குறிப்பிடப்படுகிறது. (ந-ச)

# போர்குற்றச் செயல்...

போர்குற்றச் செயல்களை விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாகவும் அதிகளவான மனிதப் படுகொலைகளை பிரபாகரன் மேற்கொண்டார்.

அரசாங்கப் படையினரால் மீட்கப்பட்ட மக்கள் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதல் மேற்கொண்டனர்.

தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்குக் கிழக்கில் மேற்கொண்ட குற்றச் செயல்களை தாம் அமெரிக்க செய்மதி மூலம் பார்த்ததாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் புதைக்கப்பட்ட நிலக்கண்ணிவெடிகள் இன்னமும் காணப்படுகின்றன. இதனால் மக்கள் பீதியுடன் வாழ்ந்து வருகின்றனர் என்றார்.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலி களின் தலைவர் பிரபாகரனின் நிலக்கீழ் மாளிகையை தாம் பார்வையிட்டதாக உடுகம ஸ்ரீ புத்தரகித்த தேரர் குறிப்பிட்டுள்ளார். (ச)

# இலங்கைக்கு நவீன ஆயுத...

கட்டியெழுப்புவதற்கு உதவும் இந்தியாவின் முயற்சிகளை வெளிப்படுத்தும் வகையில் இந்த ஆயுதங்கள் வழங்கப்படுவதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இரு ராடர்கள் மற்றும் ரஷ்யாவில் தயாரிக்கப்பட்ட பெரும் எண்ணிக்கையிலான தரையிலிருந்து வானுக்கு ஏவப்படும் ஏவுகணைகள் ஆகியவற்றையும் தற்காலிக அடிப்படையில் இலங்கைக்கு இந்தியா வழங்கியுள்ளதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யுத்தகாலத்தில் இலங்கைக் கடற்படைக்கு கரையோர காவல் படகொன்றையும் இந்தியா வழங்கியது. எனினும் அதுவும் அன்பளிப்பாகுமா என்பது தெரியவில்லை.

மேற்படிகருவிகளை இயக்குவதற்கு இந்திய விமானப்படை உத்தியோகஸ்தர்களும் ஈடுபடுத்தப்பட்டனர்.

எனினும் அவர்கள் இலங்கை பாதுகாப்புப் படையினர் தமது முகாம்களை பாதுகாத்துக் கொள்வதற்கு உதவவே ஈடுபடுத்தப்பட்டனரே தவிர வலிந்த தாக்குதல்களில் பங்குபற்றவில்லை என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவுடன் பிரதீப் குமார் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இலங்கைப் பாதுகாப்புப் படையினருக்கான எதிர்கால தேவைகள் குறித்தும் கலந்துரையாடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

# நல்லிணக்க ஆணைக்கு...

அவர் மேலும் கூறியதாவது,

நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிப்போம் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸிடம் கூறிய போது இதிலென்ன சாட்சியமளிக்கவுள்ளதென தெரிவித்த அமைச்சர், புலிகளுக்கு ஆதரவானவர்கள் இருக்கிறார்கள் இவர்கள் எமது கருத்துக்களுக்கு எதிரானவர்கள் என்று கூறினார்.

இலங்கையில் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவிலுள்ள புலி ஆதரவாளர்கள் வெளிநாட்டிலிருந்துவரும் புலி ஆதரவாளர்களான நிபுணர் குழுவினருடன் இணைந்து செயற்பட்டால் எவ்வாறு நிலைமை அமையும் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது என்றும் அவர் கூறினார்.

அத்துடன் புலிகளின் புள்ளிகள் தான் அழிக்கப்பட்டுள்ளதாகவும் ஆனாலும் புலிகள் இன்னமும் செயற்பட்டுக் கொண்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின்போதே அவர் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார். (ச)

# விசாரணைக்கு இடமளிக்...

ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூன் நியமித்திருந்த நிபுணர்கள் குழுவானது இலங்கைக்கு வந்து கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழுவின் அமர்வுகளில் பங்கேற்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ள நிலையில் கடும்போக்குடைய கட்சிகள் அதற்குக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துவரும் நிலையில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளும் அதற்கெதிராக குரல் கொடுத்துள்ளன.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தேசிய சுதந்திர முன்னணி, ஹெல உறுமய போன்ற இனவாத கட்சிகளும் எதிர்க்கட்சியான ஜே.வி.பி யும் ஐ.நா. நிபுணர் குழு வருகை தருவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றன.

இந் நிலையில் நியூயோர்க்கை தளமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகமும் இதற்கு எதிரான கருத்தை தெரிவிக்கிறது. இலங்கையின் நல்லிணக்க ஆணைக்குழுவை ஐ.நா. நிபுணர்கள் குழுவானது சந்திப்பது தொடர்பாக முன்னெச்சரிக்கையாக இருக்குமாறு ஐ.நாவை மனித உரிமைகள் கண்காணிப்பகம் கேட்டிருக்கின்றது.

இது தொடர்பாக பி.பி.சியின் சிங்கள சேவையான சந்தேசியவுக்கு கருத்து தெரிவித்த பிராட் அடம்ஸ்,

என்ன நடந்ததென்பதை நாம் அறிந்துகொள்ள விரும்புகிறோம். பாதிக்கப்பட்டோருக்கு நீதி கிடைக்க நாம் விரும்புகிறோம்.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக் குழுவின் அதிகாரங்கள் மாற்றப்பட வேண்டும்.

தீவிரமான விசாரணையில் ஈடுபடுவதற்கு புதியவர்கள் நியமிக்கப்பட வேண்டும். அது இடம்பெறுவதற்கான எந்தவொரு அறிகுறியும் இல்லையென்று பிராட் அடம்ஸ் கூறியுள்ளார்.

ஐ.நா.செயலாளர் நாயகத்தின் பேச்சாளர் பர்ஹான் ஹக் கூறுகையில்,

நிபுணர்குழு நல்லிணக்க ஆணைக்குழுவைச் சந்திக்குமென்று தெரிவித்திருந்தார்.

ஆனால் அது எப்போது இடம்பெறுமெனவும் எங்கே இடம்பெறும் எனவும் அவரால் நிச்சயப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

சர்வதேச நெருக்கடி குழு, சர்வதேச மன்னிப்புச் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் உட்பட பல்வேறு மனித உரிமைகள் அமைப்புக்கள் இலங்கை யுத்தத்தின் இறுதிக் கட்டத்தின் போது என்ன நடந்தது என்பது தொடர்பாக சுயாதீனமானதும் பக்கச்சார்பற்றதுமான விசாரணை நடத்தப்பட வேண்டுமென அழைப்பு விடுத்துவருகின்றன.

அதேசமயம் இந்த அமைப்புக்கள் நல்லிணக்க ஆணைக்குழு முன் தோன்றுவதை நிராகரித்திருந்தன. எவ்வாறாயினும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அதிகாரம் மாற்றியமைக்கப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துள்ளது. (ச)

# முன்னாள் போராளி...

ஒப்படைக்கப்படுவர்.

கிளிநொச்சியில் 1983 ஆம் ஆண்டு கால பகுதியின் பின்னர் வன்செயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்டஈடுகள் வழங்கும் வைபவத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

இந்த வைபவத்தில் மனிதவள அபிவிருத்தி அமைச்சர் டியூ குணசேகர மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

500 பேர் நட்டஈட்டுக்குரிய காசோலைகளை அமைச்சிடமிருந்து பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## மரண அறிவித்தல்

### பொன்னையா நமசிவாயம்



காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும் 83, கம்டன் ஒழுங்கை வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற விஞ்ஞான தொழில்நுட்ப பிரிவு உதவி அத்தியட்சகர் (கைத்தொழில் விஞ்ஞான அலுவல் அமைச்சு) பொன்னையா நமசிவாயம் அவர்கள் 23.12.2010 வியாழக்கிழமை இரவு இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரி பொன்னையா தம்பதிகளின் அன்பு மகனும் காலம்சென்ற பிரபல வர்த்தகர் K.K. கந்தையாபிள்ளை (K.K.K) தம்பதிகளின் மருமகனும் இராசம்மாவின் அன்புக் கணவரும், Dr. தியாகலிங்கம், Dr.சத்தியலிங்கம், Dr. பொன்மலர் ஆகியோரின் அன்புத் தந்தையும் வாசுகி, ராஜேந்திரா ஆகியோரின அன்பு மாமனாரும், அகிலன் ,ஈசானி ,மயிலோன், சுருதி, சுரபி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் அவர்களது இல்லத்தில் 27.12.2010 திங்கட்கிழமை காலை 9 மணியளவில் நடைபெற்று காலை 10 மணியளவில் கல்கிசை மயானத்தில் தகனக் கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றாரும் உறவினரும் ஏற்றுக் கொள்ளவும்.

No. 83, கம்டன் லேன்,
வெள்ளவத்தை, கொழும்பு -06
T.P.:2587021

தகவல்:
மனைவி ,
பிள்ளைகள்

(சி-1957)


புலமைப் பரிசில்-2011
பயிற்சிப் பரீட்சை ④ல் அதிகூடிய புள்ளிகளைபெற்ற பரிசுக்குரிய மாணவர்கள்
செ.திலீபா - 175 (ஆனைப்பந்தி மெ.மி.வித்தி.)
ந.கஜேந்திரன் - 170 (யா/புனித ஜோண் பொஸ்கோ)
சு.டாரணி - 167 (ஏழாலை மேற்கு சன்மார்க்க வி.)
அடுத்த பரீட்சை ⑤
26.12.2010 (நாளை ஞாயிறு)
காலை 8.00 / 9.00 / 10.00
மாலை 2.00 / 3.00 / 4.00
வெளி மாணவர்கள் விரும்பிய நேரங்களில் பரீட்சைக்கு தோற்றலாம்.
நாவலர்
ஆனைப்பந்தி,யாழ்ப்பாணம்
(சி-1960)

MyWay English ஆங்கில பயிற்சி
ஆரம்பம் : 26.12.2010 சனி, ஞாயிறு 3 மாதம்
ஒருசில இடங்களுக்கே அனுமதி உண்டு
இலக்கண கற்றல், எழுத்துப்பயிற்சி இன்றி ஒரு ஆங்கில சொல்கூட தெரியாதவர்களும் 3 மாதத்தில் ஆங்கிலத்தில் பேச முடியும்
MyWay 077 33 63 456
182, Stanley Rd, Jaffna

அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்கள்
பமிலி சுப்பர்
கேக் தயாரிப்பதற்கான பொருட்கள் மற்றும் பிஸ்கட், பால்மா, சொக்லேட், சிற்றுண்டி வகைகள், ஐஸ்கிறீம் வகைகள், பழவகை என்பவற்றைப் பெற்றுக் கொள்ளலாம்.
புதுவருடத்தை முன்னிட்டு விசேட விலைக் கழிவு விற்பனை
சந்தைக்கு அருகாமை,
மானிப்பாய்.
(சி-1956)

அன்றும் சரி இன்றும் சரி என்றும் சரி வாடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனம்
தனது புத்தம் புதிய கிளையை இலக்கம் 770,772, கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு சந்தி எனும் முகவரியில் ஆரம்பித்துள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு புத்தம் புதிய தெரிவில் புதிய டிசைனில் புதுப்பொலிவு கொண்ட
நல்லூர் சரவணா ரெக்ஸ்
எமது வியாபார நிறுவனத்தில் 2011ஆம் ஆண்டிற்கான புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட சிறுவர், சிறுமிகள், ஆண்கள், பெண்கள் என அனைவரது ஆடைத் தெரிவிற்கும் ஒரே இடம்
ஏழு நாட்களும் கடைதிறந்திருக்கும்
முகவரியை மறந்து விடாதீர்கள்
நல்லூர் சரவணா ரெக்ஸ்
770, 772, கே.கே.எஸ் வீதி, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம். 021 222 0421


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org